# நோக்கு நிலைகளை நெறிப்படுத்துதல்

# மக்கள் அரங்கு

## கற்றல் கையேடு



## நோக்கு நிலைகளை நெறிப்படுத்துதல்

# மக்கள் அரங்கு

## கற்றல் கையேடு

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF)

## துறைசார் மதிப்பீட்டுக் குழு

**திரு. வருண அழகக்கோன்**
*பிரதிப் பணிப்பாளர், அழகியல் கற்கை நிலையம் கல்வியமைச்சு (தலைமை)*
**கலாநிதி. சவ்மியா லியனகே**
*பீடாதிபதி. பட்டப்படிப்புக் கற்கைகள் துறை மற்றும் கட்புல அரங்கக் கலைப் பல்கலைக்கழகம்.*
**கலாநிதி. கே. ரதிதரன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர் நுண்கலைத் துறை, கலைப் பீடம் யாழ்ப்பாண் பல்கலைக்கழகம்.*
**பேராசிரியர். எம். எஸ். எம். அனஸ்**
*மெய்யியல் துறை, கலைப்பீடம் ,பேராதனைப் பல்கலைக்கழகம்.*
**கலாநிதி. கே. நவதர்சினி**
*சிரேஷ்ட விரிவுரையாளர், நுண்கலைத் துறை, கலைப் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

## செயற்றிட்ட மேற்பார்வையாளர்கள்

**பேராசிரியர். பத்மஸ்ரீ வனிகசுந்தர**
*தவிசாளர், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.*
**கலாநிதி. எஸ். ரகுராம்**
*பணிப்பாளர் சபை உறுப்பினர், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.*

## நூலாசிரியர் மற்றும் செயற்திட்ட பணிப்பாளர்

எம். சீ. ரஸ்மின்
**துணை ஆசிரியர்**
ரம்ஸி செய்னுதீன்

## பங்காளர்கள்

*தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச மொழிகள் அமைச்சு*
*மாகாண கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்*
*மாகாண கல்வி அமைச்சு, வடமத்திய மாகாணம்*
*மாகாண கல்வி அமைச்சு, மத்திய மாகாணம்*
*மாகாண கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்*
*மாகாண கல்வித் திணைக்களம், வட மாகாணம்*
*மாகாண கல்வித் திணைக்களம், வட மத்திய மாகாணம்*
*மாகாண கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்*
*மாகாண கல்வித் திணைக்களம், மத்திய மாகாணம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*
*கட்புல மற்றும் அரங்கக் கலைப் பல்கலைக்கழகம்*
*அரச நாடகக் குழு, இலங்கை கலைச் சபை*

## அனுசரணை

*இந்த கையேடு இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம், கனேடிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும் உள்ளூர் முன்னெடுப்புகளுக்கான கனேடிய நிதியம் (CFLI) மற்றும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (NTT) என்பவற்றின் நிதி உதவி மூலம் உருவாக்கப்பட்டது. எனினும் இந்த கையேட்டின் உள்ளடக்கம் மற்றும் கருத்துகள் என்பவற்றுக்கு இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் (SDJF) பொறுப்பாகும்.*

**தமிழ் மொழி பெயர்ப்பு:** *பதீக் அபூபக்கர்*
**தொகுப்பு உதவி:** *எம். பி. எம். பைரூஸ் / மொஹமட் அஸாட்*
**முன்னட்டைப் படம்:** *வட்சன் ஜெரோம் டயஸ்*
**வடிவமைப்பு:** *மொஹமது அஸ்வர்*
ISBN9-789-557-765-09-9
**பதிப்புரிமை:** ©*இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம், 2018*

## இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF)

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் **(SDJF)** உயிர்ப்பான ஜனநாயகம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள சமூகங்களின் பேச்சு சுதந்திரம் என்பவற்றின் மேம்பாடு தொடர்பில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒரு தேசிய மட்ட நிறுவனமாகும். புத்தாக்கமான ஊடகக் கருவிகளின் பயன்பாடு, தவிர்க்கப்பட்டவர்களின் குரல்களை ஓங்கி ஒலிக்க வைத்தல், விளிம்பு நிலை மக்களை வலுப்படுத்தல், தகவல்களுக்கான அணுகலை உருவாக்குதல் மற்றும் வெளிப்படையான கலாச்சாரம் என்பன இந்த நிறுவனத்தின் மூலோபாய முன்னுரிமைகளாகும். இந்த நிறுவனம் தனது இலக்குகளை அடையும் நோக்கில் ஊடக நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஏனைய விளிம்பு நிலைக்கு உட்படுத்தப்பட்ட குழுக்கள் என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுவதில் கிட்டத்தட்ட 8 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளது.

*இல.3/8, சுவர்னா பளேஸ், நாவல வீதி, இராஜகிரிய, இலங்கை.*
*தொ.பே: 0117 209511-205 3513 / மின்னஞ்சல் :* **info@ldjf.org /** இணையம்: **www.ldjf.org**

## பிரதான மைல்கல்

இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும், இளம் நாடகக் கலைஞர்கள், மற்றும் மக்கள் அரங்கைக் கற்ப தற்கான ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் பயன் பெறும் வகையான ஒரு கற்கைக் கையேட்டினைத் தயாரிப்பதானது ஒரு நல்ல மாற்றத்தை உண்டு பண்ணக் கூடிய ஒன்றாகும். அதற்காக SDJF குழுவினருடனும் அதன் பங்காளர்களுடனும் இணைந்து செயற்படுவது மிகவும் மகிழ்ச்சிக் குரியது.

இந்தக் கையேட்டைத் தயாரிப்பதானது காலத் திற்கு பொருத்தமுள்ளது மாத்திரமன்றி அது இலங்கையின் கற்கை முறையில் மிக நீண்ட காலமாக இருந்த இடைவெளியை நிரப்ப வல்ல-துமாகும்.

மக்கள் அரங்கு பற்றிய கோட்பாடானது மிகவும் கவர்ச்சியானதும் பலதுறைகளை உள்ளடக்கியது மாகும். இதன் காரணமாகவே மக்கள் அரங்கா-னது இலங்கையில் பிரபலமடைந்திருப்பதுடன், பல்வேறு இளைஞர் குழுக்களால் அதிகமாக பின்பற்றப் பட்டும் செயன்முறைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

பல அமைப்புகளும் தனிநபர்களும் ஏற்கனவே இந்த மக்கள் அரங்கச் செயற்பாட்டினையும் ஏனைய செயல்திறன் அரங்குகளையும் இலங்கை இளைஞர்கள் மத்தியில் பரவலாக்குவதில் முக்கிய பங்கு வகித்துக் கொண்டிருக்கின்றனர்.

"ஜனகரலிய" நடமாடும் அரங்கின் (மக்களின் அரங்கு) நிறுவனத்தினர் "பராக்கிரம நிரியல்ல" போன்றவர்கள் மக்களை இவ்வாறான அரங்கின்பால் கொண்டுவருவதில் முக்கிய பங்கு வகித்தவர்கள்.

**Act 4, British Council, Sri Lanka Unites, Care International, Family Rehabilitation Centre, Women in Need** மற்றும் ஏனைய பல அமைப்புக்கள் இந்த மக்கள் அரங்கில் இணைந்திருக்கின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக ஒரு இளைஞரோ யுவதியோ இந்த மக்கள் அரங்கினூடாக ஒரு நல்ல சமூக மாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் போது அவர்களுக்கு வழங்குவதற்கென அல்லது கற்றுக் கொள்வதற்கு என இலங்கையின் உள்நாட்டு மொழிகளில் மக்கள் அரங்கின் உள்ளடக்கத்தினை கொண்ட குறிப்பிடும்படியான எந்தவிதமான கற்கை சாதனங்களும் இல்லாமலே இருக்கின்றன.

அந்த வகையில் இந்த இடைவெளியை நிரப்பு-கின்ற முதலாவது முயற்சியாக இந்தக் கையேடு அடையாளப்படுத்தப்படுகிறது. இது ஒரு ஆரம்ப கட்ட முயற்சி என்பதனால் எதிர்காலத்தில் இதனை மேம்படுத்துவதற்கான அதிக சந்தர்ப் பங்கள் இருக்கக் கூடும்.

இந்தக் கற்கைக் கையேடானது இளைஞர்களுக்கு மக்கள் அரங்கு பற்றிய திறன்களைக் கற்றுக் கொள் ளும் ஒரு கையேடாக மாத்திரமின்றி அதனை உயிர்ப்புடன் பயன்படுத்தவும் அதனூடான ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் இலங்கையில் ஒரு உண்மையான வன்முறையற்ற பரந்ததொரு சமாதானத்தைக் கட்டியெழுப்பவும் உதவும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

உரையாடல்களையும் பன்மைத்துவத் தன்மை-களையும் உருவாக்குவதில் விருப்பமுள்ள இளைஞர்கள் இந்தக் கையேட்டினைப் பயன் படுத்த முடியும்.

அத்தோடு பாடசாலைக் குழந்தைகள், நாடகத்-துறை மாணவர்கள், இளம் குழுமக் கலைஞர்கள், அரங்கக் குழுக்கள் மற்றும் நாடக ஆசிரியர்கள் என ஏனையோருக்கும் இது ஒரு கற்கை வளமாக இருக்கும் என்பதே எனது நம்பிக்கை.

**மாறிக்கொண்டிருக்கும் சமூக இயக்கவியலுக்குள் இளைய தலைமுறையினர் பல்வேறு கலை வடிவங்களுக்குள்ளாலும் கலாசாரங்களுக்குள்ளாலும் பன்மைத்துவ மற்றும் சமாதானப் பண்புகளை முன்கொண்டு செல்லும் வழிகளைத் தேடுகின்றார்கள். அத்தகைய இளைஞர்களிடையே மிக அண்மைக்காலமாக பிரபல்யம் பெற்றுவரும் ஒரு கலை வடிவம் இந்த மக்கள் அரங்காகும்.**

**திரு வருண அழகக்கோன்**
*மீளாய்வுக் குழு பிரதிப்பணிப்பாளர், தலைவர், அழகியல் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு*

## பிரதிபலிப்புகள்

இளைஞர்களின் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும், பன்மைத்துவ அம்சங்கள் மீதான விமர்சன ரீதியான உரையாடல்களை உருவாக் கவும், குறித்த புத்தாக்க சிந்தனைகளை வளர்த் தெடுக்கவும், வித்தியாசங்களுக்கு மதிப் பளிக்கவும், சகிப்புத் தன்மை, தொடரான உரையாடல், சமத்துவம், நீதி மற்றும் வன்முறை யற்ற செயற்பாடுகள் போன்றனவற்றை மேம் படுத்தவுமான சிந்தனைகளுக்குள் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற இளைஞர்களை உள்வாங்கும் நோக்கிலான ஒரு தலையீடாகவே இந்த இலங்கைக்கான மக்கள் அரங்கு நிகழ்ச்சித்-திட்டமானது 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது.

அப்போதைய தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் உள்ளூர் மொழிகளுக்கான அமைச்சினதும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சினதும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினதும், கிழக்கு மாகாண இளம் கலைஞர் மன்றத்தினதும் அபரிமிதமான பங்களிப்பானது அடுத்து வந்த நான்கு வருடங்களுக்குள் SDJF இனை செயலுக் கத்துடன் இதற்கான பூர்வாங்க வேலைகளை ஏனைய மாகாணங்களுக்கும் பரவலாக்க பெரிதும் உதவியது.

இன்று வரை மக்கள் அரங்கு நிகழ்ச்சித்திட்ட மானது கிழக்கு, மத்திய, வட மத்திய, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் செயற்படுத்-தப்பட்டிருக்கின்றது.

பல்வேறு இன மதங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 40,000 மாணவர்களையும் 5000க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளையும், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களையும் சந்திக்கின்றமையும், நூற்றுக் கணக்கான குக்கிராமங்களைத் தரிசிக்கின் றமையும், நூற்றி அறுபதுக்கும் மேற்பட்ட குழுமக் கலைஞர்களைப் பயிற்றுவிப்பதும் தருகின்ற உயர்ந்த அனுபவமானது SDJF ஆன எமக்கு சமாதானமானதும் ஒவ்வொருவரினது வித்தியா சங்களும் பன்மைத்துவமும் சமமாக மதிக்கப் படுவதுமான ஒரு இலங்கையை உருவாக்கிக் கொண்டிருக்கும் சாத்தியமுள்ள இளைஞர்கள் பற்றிய பரந்ததொரு புரிதலை கற்றுக் கொள்ள உதவியது.

அத்தோடு பாடசாலைகளிலுள்ள இளம் சிறுவர் கள் வெளி உலகத்துக்கு பரவலாக வெளிக் கொணரப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். ஒவ்வொரு பிள்ளையும் அவனின்/அவளின் ஆற்றலுக்கேற்ப தனித்துவ மாணவர்கள். அவர்களின் கருத்துக்கள் வளர்ந்த வர்களை விட தர்க்கபூர்வமானவை. அவர்களின் கதைகள் வளர்ந்தவர்களினதை விடவும் மிகவும்

உயர்தரமானவையும் கூட. உலகம் பற்றிய அவர் களின் பார்வையும் பன்மைத்துவ அம்சங்கள் மீதான அவர்களின் கருத்தாக்கங்களும் மிகவும் சக்திவாய்ந்தவை. அதில் பலரும் தங்களது சுற்றுச் சூழலினால் பல்வேறு சவால்களை எதிர்கொண் டவர்கள்.

பலருக்கு தாங்கள் கற்றுக் கொள்ளும் முறைகள் மீது விடையளிக்கப்படாத இன்னமும் தீர்க்கப் படாத பல்வேறு கேள்விகள் இருக்கின்றன. உயர்ந்த ஆற்றலுள்ள சிறுவர்களை ஆழமாக உள்வாங்குவதன் தேவையை இந்த அவதானங்கள் உறுதி செய்கின்றன.

தனது சுய கட்டமைப்பில் சகவாழ்வுடன் சமரசம் செய்து கொண்ட, எந்தவொரு சமூகப் பிரச்சினைக் கும் ஆக்கபூர்வமுள்ள நிலைத்திருக்கும் புத்தாக் கமான தீர்வுகளைத் தந்துவிடும் அபாரமான ஆற்றல் இளைஞர்களுக்கு உண்டு என்பது எமது அனுபவமாகும்.

இளைஞர்களை உள்வாங்குவதும், செயற்படும் சமாதானத் தூதுவர்களாக நடத்துவதும், சமூகத் தலைவர்களாக வலுப்படுத்துவதும், அவர்களின் கருத்துக்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுப்பதும், நிலையான சமாதானத்தை இலங் கையில் அடைவதற்கான முக்கிய அம்சங்களாக மாறியிருக்கின்றன.

**பேராசிரியர் பத்மஸ்ரீ வனிகசுந்தர**
தவிசாளர், **SDJF**

# உள்ளடக்கம்


01. மக்கள் அரங்கு - சுருக்கமான அறிமுகம் / 02

02. ஒகஸ்டோ போல் என்பவர் யார்? / 04

03. ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கு என்ற கோட்பாட்டை புரிந்து கொள்ளல் / 06

04. மக்கள் அரங்கு / 20

05. மக்கள் அரங்கின் பண்புகள் / 24

06. மக்கள் அரங்கு முறைமை / 28

07. இலகுபடுத்துனரின் பங்கு / 36

08. ஒத்திகை செயற்பாடு / 38

09. கதை விருத்தி / 40

10. நடிப்பின் ஊடாக பாத்திரங்களை கட்டியெழுப்புதல் / 44

11. மக்கள் அரங்கங்களைத் திட்டமிடல் / 48

12. அமுலாக்கலுக்கான தேவைகள் / 54

13. கலை முகாமைத்துவம் / 56

14. கண்காணித்தலும் மதிப்பிடுதலும் / 60




Picture 01: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Mohammedu Aswer

## பார்வையாளர் - பங்குபற்றுனர் என்பவர் யார்?

இது இரட்டை வேடத்தைக் குறிக்கிறது. அதாவது நடிகராக செயற்படுபவரே பார்வையாளராகவும் தொழிற்படுவார். இது அவரின் திறன்களுக்கேற்ப அவரின் உண்மைத்தன்மையை வெளிக்கொணர அவருக்கு வாய்ப்பாக அமையும்.

# 01
# மக்கள் அரங்கு சுருக்கமான அறிமுகம்

மக்கள் அரங்கு என்பது பிரேஸில் நாட்டு புரட்சிகர கலைஞரினால் உருவாக்கப்பட்ட அளிக்கை அரங்கின் இன்னொரு வடிவமாகும். இது "ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கு" என்றும் அழைக்கப்படுகிறது. அதிகாரமற்ற பிரிவுகளை இந்தக் குழும அரங்கு வலுப்படுத்துகிறது. இது மக்களுக்கு அதிகாரமற்ற தன்மையினை விமர்சன ரீதியாகப் பார்க்கவும், அவற்றுக்கான மாற்றீடுகளையும் அத்தியாவசியமான தீர்வுகளையும் கண்டுகொள்ள அதிகாரமற்ற மக்களுக்கு வாய்ப்பினை அளிக்கின்றது.

இதன் பல்துறைப் பலத்தின் காரணமாக இது உலக அளவில் முரண் பாடுகளை வடிவமாற்றம் செய்யவும், வினைத்திறன்மிக்க முரண் பாட்டுத் தீர்வுகளுக்குரிய கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இதற்குப் பல்வேறு தனித்துவமான பண்புகள் உள்ளன. அதில் ஒன்று-தான் மக்கள் அரங்க அளிக்கைகளின் போது பார்வையாளர்கள் அளிக்கையில் தலையிடவும் நேரடியாக அதில் பங்கு கொண்டு காண்பிக் கப்பட்ட சூழலை மாற்றியமைக்கவும் வாய்ப்புப் பெறுகிறார்கள்.

இந்த இரட்டைப் பண்பின் காரணமாக வழமையான பார்வை யாளர்கள் அளிக்கையாளர்களாக உருமாற்றம் பெற முடிவதோடு அரங்குகள் மாறும் தன்மை கொண்டனவாக அல்லது வளர்ச்சி யடையும் வசனங்களைக் கொண்டனவாக தமது வடிவமைப்பினை மாற்றிக் கொள்கின்றன.

மக்கள் அரங்கானது உலகின் பல்வேறு இடங்களிலும் வெவ்வேறான பல வடிவங்களைக் கொண்டு கடந்த வருடங்களில் வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது. முறைசாரா கற்கை முறையின் பல அம்சங்களை இது கொண்டிருப்பதன் காரணமாக அனுபவம் சார் கற்கை முறைமையின் முக்கியமான கருவியாக மாறியிருக்கிறது.

ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கு என்பது மிகவும் தொன்மையான வார்த்தைப் பிரயோக முறையாகும். இந்தப் பயன்பாட்டில் அனைத்து மனிதர்களுமே அளிக்கையாளர்களாகவும் அதே நேரம் பார்வை யாளர்களாகவும் இருப்பர்.

அரங்கு என்பது அறிவின் ஒரு வடிவம்: அது சமூகத்தை மாற்றுவதற்கான ஒன்றாகவே இருக்க முடியும், அவ்வாறே இருக்கவும் வேண்டும். எமது எதிர்காலத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பதல்லாமல் அரங்கானது எதனைக் கட்டியெழுப்ப உதவ முடியும்.



Picture 02: https://www.pinterest.com

**ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கு என்பது மிகவும் தொன்மையான வார்த்தைப் பிரயோக முறையாகும். இந்தப் பயன்பாட்டில் அனைத்து மனிதர்களுமே அளிக்கையாளர்களாகவும் அதே நேரம் பார்வையாளர்களாகவும் இருப்பர்.**

**அரங்கு என்பது அறிவின் ஒரு வடிவம்: அது சமூகத்தை மாற்றுவதற்கான ஒன்றாகவே இருக்க முடியும், அவ்வாறே இருக்கவும் வேண்டும். எமது எதிர்காலத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பதல்லாமல் அரங்கானது எதனைக் கட்டியெழுப்ப உதவ முடியும்.**

**-ஒகஸ்டா போல்**

- ☐ புரட்சிகர நாடகக் கலைஞரான ஒகஸ்டோ போல் பார்வையாளர்களே பிரதான பங்காளர்களாக மாறக்கூடிய பல்வடிவங்கள் கொண்ட,ஈர்ப்புள்ள அரங்கு முறையினை அறிமுகப்படுத்தினார்.

- ☐ இராணுவ ஆட்சியினால் முழு பிரேஸிலும் கைவிடப்பட்ட தேசமாகி திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்குள் மக்கள் அமைதி பேண நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆகவேதான் உண்மையை எடுத்துரைத்து மக்கள் தாங்களாகவே உணர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு “ஒகஸ்டோ போல்” ஒரு தளத்தை உருவாக்கினார்.

- ☐ மக்கள் அரங்கு என்பது ஒரு முடிவினை எடுக்கும் சாதனமோ அல்லது பார்வையாளர்களின் எண்ணவோட்டத்தை அறிய உதவும் முறைமையோ அல்ல.

- ☐ அவர் நாடகத்தின் விளைவினை மாற்றும் நோக்கில் ஸ்பெக்ட்-அக்டர் (பங்கேற்கும் பார்வையாளர்) என்னும் சிந்தனையை அறிமுகப்படுத்தி பார்வையாளருக்கும் பங்கேற்பாளருக்கும் இடையிலிருந்த புலப்படாத சுவற்றினை உடைத்து பார்வையாளரை உருமாற்றினார்.

# 02
# ஒகஸ்டோ போல் என்பவர் யார்?

*பிரேசிலைச் சேர்ந்த முதுபெரும் நாடகக் கலைஞரான ஒகஸ்டோ போல் 1931 மார்ச் மாதம் 16ம் திகதி றியோ டீ ஜெனிரோவில் பிறந்தார். அவர் நியூயோர்க் நகரிலுள்ள கொலம்பிய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இரசாயனவியல் பொறியியலாளர் ஆவார். அரங்கில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர் தனது ஆரம்ப கால தொழில்களிலேயே அதிகம் அரங்க நாடகங்களை இயற்றினார். நியூயோர்கிலிருந்து வந்த பிறகு பிரேசிலிலுள்ள ஸாவ் போலோ அரங்கில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். 1970 இல் போல் "ஒடுக்கப் பட்டவர்களின் அரங்கினை" அறிமுகம் செய்தார். அதுவே அதிகமான ஈடுபாட்டுடன் கூடிய ஏனைய அரங்கு முறைமைகளுக்கு வழியமைத்து அரங்கக் கலையினை புரட்சிகரமாக மாற்றியது.*

*போலினுடைய அரங்க அணுகுமுறையானது ஜேர்மனிய இடதுசாரி நாடகாசிரியர் பேர்டொல்ட் ப்றெச்ட் இனுடைய ஒரு பகுதித் தாக்கத்தைக் கொண்டிருந்ததாகவும் அவரே சமூக யதார்த்தவாதத் தினூடாகவும் அது எடுத்துரைக்கும் செய்தியினூ டாகவும் பார்வையாளர்களை தன்னகப்படுத்தும் சிந்தனையினை முன்வைத்தவர் என்பதாக அண்ட்ரூ றொபின்சன் தனது* **Cease fire** *2016 இல் சொல்கிறார்.*

*ப்றெச்ட் இனுடைய மரபானது பார்வையாளர்களை உணர்வுபூர்வமாக பாத்திரங்களோடு தொடர்புபடுத்தியது மாத்திரமின்றி அந்தத் தருணத்தின் போதான அவர்களுடைய சுய வெளிப்பாட்டுக்கு அனுமதிப் பதோடு அதை விமர்சன ரீதியாக அரங்கிலேயே செயற்படுத்தவும் வாய்ப்பளித்தது.*

*இந்தத் தத்துவமே மக்கள் அரங்கில் பார்வை யாளர்களை பங்கேற்பவர்களாக மாற்றும் "போலின" கண்டடைதல்களுக்கும் முதற்படி என்றும் கூறலாம்.*

*அதாவது பார்வையாளர்கள் தாம் அரங்குக்கு முன் வந்து பாத்திரங்களுக்குப் பதிலீடாக நாடகம் முன்வைக்கும் சமூக அபாயங்களுக்கான தமது தீர்வுகளை முன்வைக்கவும் இயலுமையையும், சுதந்திரத்தையும் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.*

*"போல்" ஒரு போதும் அரங்கத்தினை நேர்வழி காட்டும் இடமாக நடத்தவில்லை. மாறாக பங்குபற்றுனர்களை வலுப்படுத்துவதனூடாக சாத்தியமானதெனக் காணப்பட்ட எல்லாப் பாதைகளையும் கண்டடைவதனையே முன்வைத்தார்.*

*ஏனைய பார்வையாளர்களின் ஆலோசனைகள் தவிர்க்க முடியாமல் பிரதிபலிக்கும் அதே நேரம் பார்வையாளர்கள் தங்களது சிந்தனைகளை அரங்கில் முன்வைக்கவும் அது அவர்கள் விரும்பிய படியான மாற்றத்தை நிகழ்த்தவும் அவர் பூரணமாக செயற்பட்டார். அரங்கு என்பது புரட்சி அல்ல, அது புரட்சிக்கான ஒரு ஒத்திகையே என்று அவர் குறிப்பிட்டார்.*

*அதன் விளைவாக றியோ டீ ஜெனிரோவின் உள்ளூராட்சி மன்றத்துக்கு அவர் தெரிவாகிய போது அங்கே தனது அரங்க நுணுக்கங்களைப் பிரயோகித்து மக்களினூடாக அரசியல் மாற்றத்தைச் செய்து தனது புரட்சிகர வாழ்வைத் தொடர்ந்தார்.*

*தன்னுடைய அரச அலுவலகங்களுக்கு தனது அரங்கக் குழுவினரையே நியமித்து மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடக நிறுவனங்களை நகரினுள் நிறுவினார்.*

*இந்தப் புத்தாக்க நுட்பத்தின் காரணமாக பிரேசிலில் 13 பொதுச்சட்டங்கள் மக்களின் நலனுக்கென மீளெழுதப்பட்டன.*

*ஆரம்பத்தில் ஒரு வெளிப்பாடு அல்லது சொற்கள் அற்ற வெறும் படங்கள் கொண்ட பட அரங்கைப் போலவே பயன்படுத்தினார். பின்னர் அவர் முன்வைத்த மக்கள் அரங்கானது ஒடுக்கப்பட்டவர்களின் மைய அரங்காக கருதப்பட்டது.*

*பின்னர் மக்களை வினைத்திறனான மாற்றத்தை நோக்கித் தூண்டும் பல்வேறு கோட்பாட்டுக் கண்டடைவுகளை வெளியிட்டார்.*



Picture 03: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Mannar District / Photo by: Alexanthar Kamilas

## ஒடுக்குமுறை என்றால் என்ன?

**சமூகத்தில் பலமான ஒரு பிரிவு ஒப்பீட்டளவில் பலமற்ற ஒரு சமூகப் பிரிவின் மீது தொடர்ச்சியாக நியாயமற்ற அல்லது நீதியற்ற முறையில் நடந்துகொள்வதோ அல்லது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதோ ஒடுக்குமுறை எனப்படும். இது பால், வகுப்பு, வயது, சமூகத் தராதரம், இன, பாலியல், பொருளியல், மத, கலாசார, அரசியல் மற்றும் ஏனைய அம்சங்கள் சார்ந்து நிகழ்த்தப்படலாம். ஒடுக்குமுறை என்பது இலங்கையைப் பொறுத்தவரை புதிதான ஒரு விடயமல்ல. இலங்கைப் பாரம்பரியத்தில் குறிப்பாக சிங்கள, தமிழ், முஸ்லிம் இலக்கியங்களிலும் அரங்க முறைகளிலும் இவை தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன.**

# 03

# ஒடுக்குமுறைக்கான மக்கள் அரங்கைப் புரிந்து கொள்ளல்

சமூகத்தைப் பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கான உண்மை வாழ்வின் ஒத்திகை என்பதே மக்கள் அரங்கு என்பதன் அடிப்படைக் கூறாகும். சமூகங்கள் தமது செயற்பாடுகளை சமகால நிலவரங்கள் மீது திசைதிருப்புவது குறித்து கல்வியியலாளர்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆர்வமுள்ள தனிநபர்களுக்கும் வழிகளைத் திறந்துவிடும் புத்தாக்க நுணுக்கங்களினூடாகவும் விளையாட்டுக்களினூடாகவும் செயன் முறைகளின் ஊடாகவுமே இது கண்டுபிடிக்கப்பட்டது.

ஒகஸ்டோ போல் ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கினை அரசியல் விடயங்களை எடுத்துரைக்கப் பயன்படுத்தினாலும், அதனை சமூகத்தின் ஏனைய ஒடுக்குமுறைகளான வறுமை, குடும்பம்சார் வன்முறை, போதைப் பொருள் அழிவு, சூழல் மாசடைதல் போன்றவற்றை எடுத்துரைக்கவும் பயன்படுத்த முடியுமானது பல்துறை நுணுக்கமாகும். ஆதலினால்தான் இது எந்த அளவிலும் எதனையும் எடுத்துரைக்கும் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்கிறது.

மக்கள் அரங்கானது கொடுக்கப்பட்ட அரங்கின் பண்புகள் கொண்ட அரங்கக் கல்வியை அல்லது கல்விசார் சொல்லாடல்களையும் இணைக்கிறது.

ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது ஓர் உரையாடல்களின் விளையாட்டேயாகும். நாம் சேர்ந்து விளையாடி ஒன்றாகக் கற்றுக் கொள்கிறோம். அனைத்து வகையான விளையாட்டுகளும் நாம் பின்பற்ற வேண்டிய ஒரு ஒழுக்கத்தை எவ்வாறு விளையாடுவது என்ற விதிகளைக் கொண்டிருக்கும். அதே வேளை விளையாட்டுகளுக்கு புத்தாக்கமும் சுதந்திரமும் இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஒழுக்கத்துக்கும் நேரெதிரான சுதந்திரத்துக்குமிடையில் ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது ஓர் இணைப்புப் பாலமாகும். ஒழுக்கமின்றேல் சமூக வாழ்வு இல்லை, சுதந்திரம் இன்றேல் வாழ்வே இல்லை.

அனைவரும் சுயகௌரவத்துடன் வாழும் உரிமையை மீள நிறுவ வேண்டும். தாம் யாரென்று நம்மில் அனைவரும் எண்ணிக் கொண்டிருப்பதை விடவும் பல மடங்கு சிறந்தவர்கள் நாம் என்று நம்புகிறோம். நாம் தோழமையில் நம்பிக்கை கொள்கின்றோம்.


நம்முடைய சுதந்திரம் மனித குலத்தை மனிதப் பண்புகள் கொண்டதாக மாற்றவும், மனித செயற்பாடுகள், துறைகள் (சமூக, முன்மாதிரி அரசியல் மற்றும் கலை) அத்தனைக்குள்ளும் சுயாதீனமாக உள் நுழையவுமாகும்.

அரங்கு ஒரு மொழி என்பதால் அது மனிதன் பற்றிய அனைத்து விடயங்களையும் பேச முடியும் என்பதோடு அது அரங்கத்தினுள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுவிடக் கூடாது. நாம் சமாதானத்தை நம்புகிறோம்.

ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கை மேம்படுத்தும் போது ஒகஸ்டோ போல் பல்வேறு பிரச்சினைகளை முன்வைக்கும் பல்வேறு சமூகங்களை இணைத்துக்கொண்டார். அதனால்தான் அவர் பல்வேறு நுணுக்கங்களை முயற்சி செய்ய வேண்டி இருந்தது.

இந்த நுணுக்கங்கள் பல்வேறு அரங்க முறைகளிலும் ஒன்றிணைக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பெறுபேறுகளைப் பெறுவதற்காக வெவ்வேறு செயன்முறைகளில் ஈடுபட்டன.

போலினால் பயன்படுத்தப்பட்ட நுணுக்கங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.



## ஒடுக்குமுறையை புரிந்துகொள்ளல்

ஒரு குடும்பத்தில் நிகழும் ஒடுக்குமுறைக்கு உதாரணம் கீழே தரப்படுகிறது.

ஒரு நடுத்தர அளவிலான குடும்பத்தில் அப்பா, அம்மா மற்றும் மகள் ஆகியோர் இருக்கிறார்கள் என எண்ணிக் கொள்ளுங்கள். குறைந்த வருமானத்தில் எழுதுவினைஞராக வேலை செய்யும் அப்பா வேலை முடிந்தபின்னர் தினமும் குடித்து விட்டே வீட்டுக்கு வருகிறார்.

அவர் வீடுவந்து மனைவிக்கு சத்தமாகக் கத்தி தான் விரும்பும்படியே அவர் நடந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்துகிறார். தனக்கு உணவு சமைக்கும்படியும் சொல்கிறார்.

ஆனால் துரதிஷ்டவசமாக  வீட்டில் மளிகைப் பொருட்கள் தீர்ந்து போய் கணவன் வரும்போது எடுத்து வருவார் என்று மனைவி நம்பியிருக்கிறார்.

கணவன் கடுமையாகக் கோபமடைந்து மனைவியை நிலத்தில் தள்ளி விடுகிறார். அதைத் தடுக்க மகள் குறுக்கே வரவும் அவரின் கோபம் மேலும் அதிகரித்து இருவரையும் அடித்துத் தாக்குகிறார்.

இந்த நாடகச் சித்தரிப்பைப் பார்வையாளர்கள் உற்று நோக்கினால் இதில் பல்வேறு ஒடுக்குமுறைகளை இனங்காட்ட முடியும். கீழ்வரும் கேள்விகள் இந்தக் கதையைப் பற்றி எழுப்பப்பட முடியும்.

- ☐ இங்கே எது அடக்குமுறை?
- ☐ இது எமது சமூகங்களில் பொதுவான பிரச்சனையா?
- ☐ இது ஏன் நடக்கிறது?
- ☐ இந்தத் தாய் இச் சூழ்நிலையை எவ்வாறு சமாளிக்க முடியும்?
- ☐ இந்தத் தாய்க்கும் மகளுக்கும் உதவ யாராவது இருக்கின்றார்களா?
- ☐ சமூகம் இதில் எவ்வாறு தலையிட முடியும்?

அதிகாரம் அற்றிருத்தல் அல்லது ஏனைய சமூகப் பிரச்சனைகளின் தீர்வுக்கான அடித்தளமானது எழுப்பப்படுகின்ற கேள்விகளிலேயே தங்கியிருக்கின்றது என்பதையே ஒடுக்கப்பட்டோர்களின் அரங்கானது உறுதியாக நம்புகின்றது. நல்ல பதில்களை வைத்திருப்பதை விட சிறந்த கேள்விகளைக் கேட்பதே சிறந்தது என ஒகஸ்டோ போல் நம்பினார்.



Picture 04: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Jaffna District / Photo by: Alexanthar Kamilas

## 3.1 சட்டவாக்க அரங்கு (Legislative theatre)

சட்டவாக்க அரங்கில் ஓரங்கட்டப்பட்ட சமூகப் பங்குபற்றுனர்களை உள்வாங்கி அவர்களின் உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவுமான நோக்கில் மக்கள் அரங்குக் கலையைப் பயன்படுத்தி ஜனநாயகமயப் படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் அரங்கின் பிரதான வேறுபாடு என்னவெனில் அளிக்கையின் போது பார்வையாளர்களுக்கு முன்னால் சட்டத்தரணி தோன்றி முன்வைக்கப்படுகின்ற ஆலோசனைகளிலிருந்து நகர சபைகள் மற்றும் மாகாண சபைகள் அல்லது பாராளுமன்றத்துக்கு அவசியமான மாற்றங்களைக் கொண்டவற்றைத் தனது சட்ட அறிக்கைக்கெனத் தேர்ந்தெடுப்பார். இது மக்கள் குடிப்பண்பினை சட்டவாக்கத்துக்கான விருப்பாக மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்டது.

ரியோ டீ ஜனிரியோவில் போலின் காலத்தில், புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு வினைத் திறனான கருவியாக சட்டவாக்க அரங்குகளை அவர் பயன்படுத்தினார். உதாரணமாக 2384/95 சட்ட மானது கூறுவதாவது, எல்லா மாநகர வைத்தியசாலைகளும் வயது வந்தவர்களது பிரச்சினைகள் மற்றும் நோய்களை பராமரிப்பதற்காக விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களை கட்டாயம் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறுகின்றது. இதுவே சட்டவாக்க அரங்கத்தை உபயோகித்து ரியோ டீ ஜனிரியோ வில் இயற்றப்பட்ட முதலாவது சட்டமாகும். இந்தச் சட்டவாக்க அரங்கின் மூலம் உருவாக்கப்பட்ட இன்னொ-ாரு சட்டமானது எல்லா ஜோடிகளுக்கும் எந்த விதமான பாலின வேறுபாடுகளின்றி உணவுச்சாலைகளில் ஒரே மாதிரியான கட்டணத்தையே அறவிட வேண்டும் என வலியுறுத்துகின்றது. எனவே இது அரசியல் செயற் பாட்டில் மற்றும் முடிவெடுக்கும் செயன்முறையின் போது வினைத்திறனான கருவியாக காணப்படுகின்றது.

**சட்டவாக்க அரங்கானது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் இருக்கின்ற சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவுமான மக்கள் அரங்கின் ஒரு வடிவமேயாகும், இங்கே சட்டத்தரணிகளும் கொள்கை வகுப்பாளர்களும் அழைக்கப்பட்டு பார்வையாளர்களாக இருத்தப்படுவதன் காரணமாக அவர்களால் கொள்கை வகுப்புக்குத் தேவையான விபரங்களைப் பிரித்தெடுக்க முடிகிறது. அது சட்டவாக்க செயற்பாட்டின் போது சமூகத்தின் மீது நேரான பிரதிபலிப்புக்களைச் செய்கிறது.**



Picture 05: Sri Lanka Forum Theatre Programme - Phase II / Kandy District / Photo by: Mohammedu Aswer

## 3.2 விவாத அரங்கு (Debate theatre)

சமகால மற்றும் சமூகப் பிரச்சினைகளை விவாத வடிவில் அரங்கில் வெளிப்படுத்தும் இன்னொரு புத்தாக்கக் கருவியே விவாத அரங்காகும்.

மக்கள் அரங்குக்கும், விவாத அரங்குக்கும் இடையிலான வித்தியாசம் மிகவும் எளிதானது. அதாவது விவாத அரங்கானது உரையாடலினை மாத்திரமே நோக்குவதோடு அளிக்கையின் பிறகு மக்கள் தலையிடுவதை வேண்டுவதில்லை.

ஏனெனில் நாடகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் பொதுவாக கருத்துக்களையும் அனுபவங்களையும், நிபுணத்துவங்களையும், விளக்கவுரைகளையும் பகிர்ந்துகொள்வதையே அடிப் படையாகக் கொண்டிருப்பவை.

**விவாத அரங்கானது சமூகப் பிரச்சினைகளை விவாத வடிவில் முன்வைப்பதும் அதை எதிர்த்துரைப்பதுமான ஒழுங்கிலான மக்களைக் கொண்டிருக்கும். இது இருக்கின்ற பிரச்சி னைகள் மீதான ஒரு நிலைப்பாட்டை அறிவதாக அல்லாமல் பலரது கருத்துக்களையும் பெறும் ஒரு பொதுக் கண்ணோட்டத்தைப் பெற உதவுகிறது.**



## 3.3 பட அரங்கு (Image Theatre)

நடிகர்களைப் பயன்படுத்தி படங்களைக் கொண்டு யதார்த்தத்தைப் போலச் செய்தலே பட அரங்கு எனப்படுகிறது. அதாவது சமூகத்தைப் புறந்தள்ளும் சூழ்நிலைகளை நடிகர்கள் உள்வாங்கி ஒரு வெளிப்பாட்டு வடிவில் மக்களுக்கு காண்பித்தலாகும்.

வழக்கமாக இந்த அளிக்கை முறையானது நடிகர்களால் பொதுவான மக்கள் கூடும் இடங்களில் மக்களால் காண முடியுமான இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

நடிகர்கள் படங்களை ஒரு கிடையான அல்லது அசைவற்ற நிலையில் தயாரிப்பார்கள். வழிப்படு த்துனர் மக்களை உள்வாங்கும் நோக்கில் அப் படங்கள் பற்றிய அவர்களின் கருத்துக்களைக் கேட்பதைத் தொடர்ந்து அளிக்கையானது ஆரம்பமாகும்.

மக்கள் அரங்குக்கு ஒப்பாகவே வழிநடத்துனர் மக்கள் பார்க்கும் படத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களை முன்வைப்பதனூடாக மக்களின் ஈடுபாட்டு ஆர்வத்தை அதிகரிப்பார்.

**பட அரங்கானது அசைவற்ற படங்களினூடாக மக்கள் மத்தியில் யதார்த்தத்தைப் போலச் செய்கிறது. இதனால் மக்கள் முன்வைக்கப்படுகின்ற பிரச்சனையைத் தாங்கள் விவரணம் செய்யும் வாய்ப்பைப் பெறுவதோடு உரையாடலிலும் அதீத ஆர்வம் கொள்கிறார்கள்.**



Picture 06: Sri Lanka Forum Theatre Programme - Phase II / Kandy District / Photo by: Asjain Wahid

## 3.4 புலப்படா அரங்கு / குழப்பும் அரங்கு (INVISIBLE THEATRE/DISRUPTIVE THEATRE)

புலப்படா அரங்கு அல்லது குழப்பும் அரங்கானது பஸ் நிலையம் சந்தை, புகையிரத நிலையம், மற்றும் ஏனைய பொது இடங்களிலேயே அளிக்கை செய்து காட்டப்படுகின்றன. மக்கள் கூட்டத்துக்குள் நடிகர் ஆனவர் மக்களோடு மக்களாக நிறுத்தப்பட்டிருப்பதை மக்கள் அறிய மாட்டார்கள். இன்னொரு வார்த்தையில் சொல்வதாயின் நடிகர்களானவர்கள் ஒரு சாமான்ய சமூக உறுப்பினராக வேடம் பூண்டு அவ்வாறே நடந்து கொள்வார்கள்.

மக்களோடு ஒன்றித்துக் கலப்பதற்கும் எந்த வித்தியாசங்களும் காட்டாது சாதாரணமாக நடந்து கொள்வதற்கும் நடிகர்கள் மிகவும் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். மக்களின் கவனத்தைத் திருப்பும்படி சத்தமாகவும் அந்த சூழ்நிலைக்கு ஏற்றாற்போலும் சமூகப் பிரச்சினை ஒன்றை மக்களுக்குள்ளிருந்து முன்வைக்கும் இந்தச் செயன்முறையானது நடிகர்களுக்கு மிக நன்றாக விபரிக்கப்பட்டிருக்கும். அதே நேரத்தில் ஏனைய நடிகர்களும் அந்தச் சூழலோடு இணைந்து காட்சியை வழிப்படுத்துவதோடு மக்களோடு இணைவார்கள். காட்சியானது சிலவேளைகளில் அங்கே இருந்தவர்கள் நடிகர்கள்தான் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தாமலேயே முடியும் அல்லது இது அரங்குதான் மாறாக உண்மை இல்லை என்று காட்சியின் இறுதியில் காட்டப்படும்.

முடிவின் பின்னர் குறித்த பிரச்சனை முறையாக முன்வைக்கப்பட்டதா என்றும் முன்வைக்கப்பட்ட பிரச்சனை அவசியமானதா இல்லையா என்பதும் மக்களின் பார்வைக் கோணத்தில் உரையாடப்படும்.

**புலப்படா அரங்கு அல்லது குழப்பும் அரங்கானது நாடகமானது அரங்கேற்றப்படுகிறது என்று மக்கள் அறியாமலேயே மக்கள் அரங்கில் காண்பிக்கப்படும். நடிகர்கள் பொது மக்களாகவே பாவனை செய்து பாத்திரம் ஏற்பார்கள். தலையீடானது நாடகத்தில் உள்ளடக்கப்பட்ட விடயத்தை இயல்பான ஒன்றாக மாற்றும்.**



## 3.5 மீட்டல் அரங்கு (PLAYBACK THEATRE)

இந்தப் புத்தாக்க அரங்கு முறையானது பார்வையாளர்களை மேடைக்கு வந்து அவர்களின் கதைகளையும் சொந்த அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள ஊக்கமளிப்பதாகும். இதன் போது வளவாளரும் ஏனைய நடிகர்களும் அவர்களின் கதைகளைக் கவனமாக செவிமடுத்து புரிந்து கொள்வார்கள். இறுதியில் இக் கதைகள் முழுமையாகப் பெறப்பட்டதா என்பதை அறிவதற்காக பார்வையாளர்களை நோக்கி கேள்வி-கள் தொடுக்கப்படும். அதைத் தொடர்ந்து நடிகர்கள், பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவத்தினை முழுக்கப் பிரதிபலிக்கும் வண்ணம் வசனங்கள், மேம்படுத்தல்கள், நுணுக்கங்கள், இசை, பாடல்கள் மற்றும் அசைவுகளைக் கொண்டு அளிக்கைகளைச் செய்வர்.

பார்வையாளர்கள் விவரணமாக முன்வைத்த தமது வாழ்க்கையின் அனுபவங்களை மீட்டிப்பார்ப் பதாக இது அமைகிறது. இறுதியில் கதையானது உண்மையிலேயே நிஜவாழ்வின் அனுபவத்துடன் ஒத்துப் போகிறதா என்ற பின்னூட்டத்தைப் பெறுவதற்காக பார்வையாளர்கள் மீண்டும் மேடைக்கு அழைக்கப்படுவர்.

**பார்வையாளர்கள் தங்களின் வாழ்வின் அனுபவங்களை கதைகளைப் பகிர்ந்து கொள்ள அதை நாடகமாக அரங்கில் நடிக நடிகைகளால் அளிக்கை செய்யப்படுகிறது.**



Picture 07: Sri Lanka Forum Theatre Programme - Phase III / Galle District / Photo by: Asjain Wahid

## பட அரங்கை நடைமுறையில் செய்வதற்கான செயல்முறைகளைப் பார்ப்போம்.

### செயல்முறை

1. பங்குபற்றுனர்களை இரண்டு நபர்களாகப் பிரிக்கவும்,ஒருவர் **F** (சிற்பி) மற்றவர் **G** (களி).
2. F ஆனவர் அமைதியாக ஒடுக்குமுறையை சித்தரிக்கும் சிற்பத்தை வழிநடத்துனரின் அறிவுறுத்தலிற்கு அமைய பயன்படுத்தி உருவாக்குவார்.
3. பின்னர் அனைத்து சிற்பிகளும் அறையின் ஒரு பக்கத்திற்கு வந்து அவர்களால் உருவாக்கப் பட்டுள்ள ஒடுக்குமுறை தொடர்பான சிற்பங்களை அவதானிப்பர். பின்னர் அவர்களால் உருவாக்கப்படாத ஒரு சிற்பத்தை தேர்ந்தெடுத்து அங்கு சித்தரிக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைக்கு பொருத்தமான நபரின் குணாதிசயங்களை வெளிக்கொண்டு வருவதற்கு தயார்படுத்துவர்.
4. பின்னர் வழிநடத்துனர் அந்த சிலைகளை அசைவுகள்,ஒலி,வசனம் கொடுப்பதன் மூலம் ஒடுக்கு முறையாளரின் வித்தியாசமான நடிபங்குகளை கொண்டு வருவதற்கு முயற்சி செய்வார்.

| முக்கிய குறிப்புகள | 01 | 02 | 03 | 04 |
| --- | --- | --- | --- | --- |
| | ஒடுக்குமுறை என்பது அரசியல் ஒடுக்குமுறை" என்ற விடயத்தைத் தாண்டி ஒரு பன்மத்துவக் கருத்தாக்கமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். | ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது உரையாடல்களை நடாத்தவும், சமூக மைய பிரச்சனைகளுக்கான தீர்வை முன்வைக்கவும் பயன்படுகின்ற மரபை மீறிய ஒரு அரங்க முறையாகும். இது ஒருவரின் சமூக நிலை குறித்தும் நாம் எவ்வாறு மரபுகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதையும் விழிப்புணர்வு செய்யவே வடிவமைக்கப்பட்டுள்ளது. | ஓகஸ்டோ போலே இந்த ஒடுக்கப்பட்டவர்களின் அரங்குக்கான முன்னோடியாவார். அதே நேரம் அதற்குச் சமனாக இருக்கின்ற உள்நாட்டு அரங்க முறைகளையும் நாம் கண்டறிய வேண்டும். | ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது பார்வையாளர்களை ஆர்வத்துடன் தலையிடவும் பங்கெடுக்கவுமான வழிகளைத் தருவதனூடாக நாடகத்தில் உள்வாங்கப்பட்ட பிரச்சனைகளுக்கான மாற்றீடுகளை முன்வைக்க உதவுகிறது. |

# இலக்குகளும் நம்பிக்கைகளும்



08

அனைத்து மனிதர்களும் தங்களது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் அதே மொழியைத்தான் நடிகர்கள் அரங்கில் பயன்படுத்துகின்றார்கள். அவர்களின் குரல்கள், அசைவுகள், பாவனைகள் என அனைத்து உணர்வுகளையும் அரங்க மொழியில் மொழிபெயர்க்கிறார்கள்.

07

ஒரு மனிதன் ஒரு பொருளை, மனிதனை அல்லது வெளியை அவதானிப்பதற்குள் தனது செயற்பாட்டை மட்டுப்படுத்தும் போது தனது நடிப்பதற்கான ஆற்றலையும் தேவைப்பாட்டையும் மெதுவாக நிராகரித்து விடுகிற அதே நேரம் நடிப்பில் பங்குபற்றுவதற்கான அவர்களின் விருப்பங்களையும் சக்தியையும் அந்த வெளிக்குள், நபருக்குள் அல்லது பொருளுக்குள் ஊடுகடத்தி விடுகிறார்கள். அந்த வெளியே அழகியல் வெளியாகும்.

06

மூன்று அத்தியாவசிய அம்சங்களை அரங்கு கொண்டிருக்கிறது. அக அரங்கு, புற அரங்கு, அரங்க மொழி.

05

ஒவ்வொரு மனித உயிரும் நடிக்கும் திறனைத் தன்னகத்தே கொண்டது. தம்முடைய வாழ்வுக்காக நாம் அவசியமான நடிப்புக்களைத் தயார்படுத்த வேண்டியும் அவை பிறகு நமது சூழலில் எவ்வாறான தாக்கத்தைச் செய்திருக்கிறது என்பதை அவதானிக்க வேண்டியும் இருக்கிறது. மனிதனாக இருப்பது என்பது அரங்காக இருப்பதுமாகும். அதே நேரம் நடிகரினதும் பார்வையாளரினதும் ஒன்றித்த இருப்புமாகும். இதுவே அரங்கின் உள்ளார்ந்த நிலையாகும். (Subjective Theatre)

01

மக்கள் அரங்கானது ஆண்களும் பெண்களும் தமக்குள் உட்பொதிந்திருப்பவற்றினை விருத்தி செய்வதற்கான பயிற்சிகள், விளையாட்டுகள், நுணுக்கங்கள் என அரங்கின் அனைத்து அவசியமான அம்சங்களையும் கொண்டிருக்கிறது.

02

மக்கள் அரங்குடைய அடிப்படை இலக்கானது மனிதகுலத்தை மனிதத்தன்மை உள்ளதாக ஆக்குவதாகும்.

03

ஒவ்வொரு மனிதனும் ஒரு அரங்கே

04

அளிக்கையாளர்களும் பார்வையாளர்களும் ஒன்றுக்கு மேற்பட்ட இருத்தலை ஒரே வெளியில் நிகழ்த்துவதாக மக்கள் அரங்கு பொருள்படுகிறது.

13

உலகளாவிய ரீதியிலான வன்முறையற்ற அமைதியைத் தேடுகின்ற அழகியல் இயக்கமே மக்கள் அரங்காகும்.

14

மக்கள் அரங்கானது மக்களால் மக்களுக்கான மக்களின் அரங்கு என்பதாக முன்வைப்பதனூடாக மனிதப் பண்புகளை மீண்டும் செயற்படுத்த முயல்கின்றது. அதாவது மக்களை அரங்கப் புனைவினுள் கதாபாத்திரங்களாக இயங்கச் செய்யும் பொறிமுறையாக செயற்படுகிறது. உ-ம்: அவர்களுடைய சொந்த வாழ்வின் விடயங்களையே நடித்தல்.

15

அதனுடைய மனிதாபிமான மற்றும் ஜனநாயகப் பண்புகளின் காரணமாக அது கல்வி, கலாசார, கலை, அரசியல், சமூக சேவை, உளவளத்துணை நிகழ்வுகள், சுகாதாரம் என பல்வேறு துறைகளிலும் உலகளாவிய ரீதியில் உபயோகப்படுத்தப்படுகின்றது. இந்தக் கொள்கை அறிவிப்பின் பின்னணியுடன் இதன் இயல்பினையும் பயன்பாட்டு நோக்கங்களையும் பட்டியலிடும் பல்வேறு எண்ணிக்கையான பின்பற்றத்தகு செயற்றிட்டங்கள் விபரிக்கப்படுகின்றன.

16

மக்கள் அரங்கானது உலகின் பாதியளவிலான சனத்தொகையினால் இன்று பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது விருப்பங்களைக் கண்டடையவும் வெளிப்படுத்தவும், தன்னையும் மற்றவர்களையும் அறிந்து கொள்ளவும், அமைதியைத் தரும் வழிகளில் கவலைகளையும் வலிகளையும் உருவாக்கும் சூழ்நிலைகளை மாற்றக் கூடிய கருவியாகவும், தொழிற்படுகின்ற அதே நேரம், தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் மற்றவர்களின் வித்தியாசங்களை மதித்து உள்வாங்கும் உரையாடல்களுக்காகவும், இறுதியாக உண்மை ஜனநாயகத்தின் அடித்தளமாக இருக்கின்ற பொருளாதார சமூக நீதிக்காகவுமான கருவியாக இருக்கின்றது. மொத்தத்தில் மக்கள் அரங்கு என்பதன் பொதுவான இலக்கானது அடிப்படை மனித உரிமைகளின் மேம்பாடாகும்.

ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது அனைவருக்கும் நிகழ்கால விடயங்களைக் கொண்டு அவர்களின் கடந்த காலத்தை ஆராயவும் அதே போல எதிர்காலத்துக்காகக் காத்திராது அதனைக் கண்டடையவும் அழகியல் வாய்ப்பை வழங்குகின்றது. ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது மனிதர்களுக்கு ஏற்கனவே உரித்தான மொழிகளை மீளப்பெற உதவுகிறது. நாம் அரங்கில் நடிப்பதனூடாகவே சமூகத்தில் எவ்வாறு வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்கிறோம். நாம் எவ்வாறு உணர்வது என்பதை உணர்வதன் வாயிலாகவும், எவ்வாறு எண்ணுவது என்பதை எண்ணுவதன் வாயிலாகவும், எவ்வாறு நடிப்பது என்பதை நடிப்பதன் வாயிலாகவும் கற்றுக் கொள்கிறோம். ஒடுக்கப்பட்டவர்களின் அரங்கானது யதார்த்தத்துக்கான ஒத்திகையேயாகும்.

09

ஒடுக்கப்பட்டவர்கள் என்போர் சமூக, கலாசார, அரசியல், பொருளாதார, இன, பால், அல்லது வேறொரு ரீதியில் தங்களது உரையாடும் உரிமையை இழந்தவர்கள் அல்லது அந்த உரிமையை அனுபவிக்க ஏதோ ஒரு வகையில் தடுக்கப்பட்டவர்களே ஆகும்.

10

உரையாடல் என்பது மனிதர்களாகவோ அல்லது குழுக்களாகவோ சுதந்திரமாகப் பரிமாறிக் கொள்ள சமமான முறையில் மனித சமூகத்தில் மதிப்பளிக்கவும் மதிப்பளிக்கப்படவுமான பங்கெடுத்தலே ஆகும்.

11

ஆண்,பெண், இனங்கள், குடும்பங்கள், குழுக்கள், தேசங்கள் என மனித உறவுகளுக்கிடையிலான உரையாடல் தன்மையைமையப்படுத்தியே அமையவேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே மக்கள் அரங்கு அமையப்பெற்றிருக்கிறது. உண்மையில் அனைத்து உரையாடல்களும் ஒடுக்குபவருக்கும் ஒடுக்கப்படுபவருக்குமிடையிலான உரையாடலை உருவாக்கும் அவா கொண்டனவாகவே அமைய வேண்டும். இந்த உண்மையிலிருந்து நோக்கும் போது மக்கள் அரங்கானது மனிதர்களுக்கிடையிலான உரையாடலை கட்டியெழுப்பவே உதவுகிறது.

12




Picture 08: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Alexanthar Kamilas

# 04
# மக்கள் அரங்கு

ஒவ்வொரு மனிதனும் அரங்கையும் நடிகனையும் பார்வையாளனையும் ஒருமித்து தன்னகத்தே கொண்டிருக்கிறான் என ஒகஸ்டோ போல் நம்பினார். நாம் நமது செயற்பாடுகளை உற்று நோக்கவும் அதை உலகுக்குப் பயன்தரக்கூடிய செயலாக மாற்றவோ திருத்திக் கொள்ளவோ தேவையான திறனைக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் மக்கள் அரங்கு அனைத்து மனிதரதும் உள்ளார்ந்த பண்புகளை செயற்பாடு மூலம் கண்டடைவதற்கான நோக்கில் அமைக்கப்பட்டிருக்கிறது. அரங்கானது அறிவின் ஒரு நிலையாகும். அது சமூகத்தை சீர்திருத்த வேண்டிய, சீர்திருத்த முடியுமான ஒன்றாகும். எமது எதிர்காலத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பதன்றி அதை நாமே உருவாக்குவதற்கு அரங்கினால் உதவ முடியும்.

**எப்போதும் மக்கள் அரங்கின் மையக் கருவாக,
பார்வையாளர்களுக்கு அவசியமான தொடர்புள்ளதாகப்
பகிரப்படும் வாழ்க்கை அனுபவமே காணப்படும்.
அது வரலாற்று ரீதியாக சமத்துவமின்மை,
அநீதி மற்றும் பாகுபாடு முதலான ஒடுக்குமுறைகளை
முன்வைக்கவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.
தற்போதைய வழக்கத்தில் மக்கள் அரங்கானது வெவ்வேறு மதங்களை,
நம்பிக்கைகளை, இனங்களின் பின்னணிகளைக் கொண்ட மக்களை
ஒன்று திரட்டவும் அதனூடாக முரண்பாடுகளை செயல்வாதம்
மிக்க ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவ பண்புகளாக
மாற்றவும் விவாதங்களாக மாற்றவுமான கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.
இதன் முழு இலக்குமே கற்பனாவாதத் தீர்வுகளைக்
கண்டுபிடிப்பதன்றி பார்வையாளர்களை,
நிலைமைகளை ஆராயவும் ஒடுக்குமுறையை முறியடிக்கும்
வழிமுறைகளைத் தேட முயலவும் அதனூடாக நேரான
சிந்தனை மிக்க அணுகு முறைகளை
சமூகப் பிரச்சினைகளுக்கு முன்வைக்கவும் தூண்டுகின்றது.**

எளிய மொழியில் சொல்வதானால் மக்கள் அரங்கெனப்படுவது பிரதான பாத்திரத்தையே சுற்றுகின்றது. அவரே ஒடுக்குமுறையை அனுபவித்தவராவார், அவரையே ஒடுக்குமுறை ஏதோ ஒரு வகையில் பாதித்திருக்கும். அவரையே கதையானது கதாபாத்திரத்தின் வாழ்வாக சித்தரிக்கும். இந்தக் குறுங்கதை பிரதான பாத்திரம் கடந்தாக வேண்டிய ஒடுக்குமுறைகளை விபரிப்பதோடு, அவருக்கோ அவளுக்கோ ஒரு செயற்பாட்டினூடாக உதவுவதற்காக சிந்திக்கும் தறுவாயில் பார்வையாளர்களோடு ஒரு தொடர்பை ஏற்படுத்துமாறு பிரதான பாத்திரத்தைத் கட்டாயப்படுத்துகிறது.

முரண்பாடுகளையும் தீவிரமான விவாதங்களையும் ஜனநாயக மற்றும் பன்மைத்துவ வலுக்களைக் கொண்டு உருமாற்றுவதே உள் நோக்கமாயினும், கதைக் கருவானது மாறாததாகவே இருக்கும். பார்வையாளர்க ளுக்கு நேரடியான பாதிப்பைச் செய்யவும் அளிக்கை குறித்த விவாதத்தினைச் செய்யவுமான தளத்தினை இது உருவாக்கி விலைமதிக்க முடியாத ஒரு சமூகத் தலையீட்டுக்கான கருவியாக மாற்றுகின்றது.

ஆரம்பத்தில் ஒரேயொரு தடவை அளிக்கை செய்யப்பட்டு அதைத் தொடர்ந்து குறித்த பிரச்சனை-யைத் தீர்ப்பதற்கான சாத்தியமான வழிகளைத் தேடுகின்ற விவாதங்கள் ஆரம்பமாகும். நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையிலான இந்த உரையாடலை ஜோக்கர் எனப்படும் பாத்திரமே வழி நடத்துவார், அவரே அரங்கின் மத்தியில் நின்று கொண்டு பார்வையாளர்களின் பங்குபற்றுதலை விளங்கப்ப டுத்துவார்.

ஜோக்கர் என்னும் பெயரின் வேறு அர்த்தங்களைக் கருத்தில் கொண்டு இந்தக் கையேட்டில் அதற்குப் பதிலாக "வழிப்படுத்துனர்" என்ற சொல் வழங்கப்படுகிறது. பார்வையாளர்களுக்கு பார்வையாளர் அளிக்கையாளர் களாக இருப்பது குறித்தும் அவர்கள் அரங்குக்குள் தலையிடும் புள்ளி குறித்தும் அறிவுறுத்தப்படும். அது அவர்கள் மெதுவாகக் கையை உயர்த்தி "நிறுத்து" என்று சொல்வதாகும்.

**அவர்களுக்கு பாரபட்சம் என்பது பிழையானது என அறிந்து கொள்ளுமளவு சமூக மனப்பாங்கு இல்லாமல் இருக்கலாம். இவ்வாறான சூழ்நிலைகளில் குரலற்ற பலமற்ற மக்களே பாதிக்கப்பட்டவர்களாக மாறுகின்றனர். எப்போதும் ஒடுக்கு முறையை எதிர்கொள்பவர்கள் பாரபட்சம், சமத்துவமின்மை, முரண்பாடு மற்றும் கருத் துரிமைக்கான இடம் இன்மை போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களோகவே இருப்பர். ஒடுக்குமுறை என்பது சமூகத்தில் எங்குமே காணக் கிடைக்கின்ற மனித வாழ்வினுடைய ஒரு பொதுவான யதார்த்தமாகும். கண்டடைதல் முறைகளினூடாகவும் விவாதங்களினூடாகவும் மக்கள் அரங்கானது பாரபட்சம், சமத்துவமின்மை, வன்முறை, மற்றும் குரலற்றிருத்தல் போன்றவற்றைக் கையாளுவதில் நல்ல மாற்றங்கள் ஏற் படுத்துவது குறித்த ஒரு வலுப்படுத்தல் அறிவை வழங்க முடியும். அதே போல-தான் சில மக்கள் அரங்கின் பயிற்சிகளை நோக்கும் போது அவை பங்குபற்றுபவர் களின் ஆளுமைகள் அல்லது கடந்த கால அனுபவங்களை வேண்டுவதனூடாக பங்கு பற்றுனர்கள் தங்களினதும் மற்றவர்களினதும் சமூகத்தில் தமது நிலை குறித்துமான கண்டடைதல்களை உள்ளடக்க முடியுமாக இருக்கிறது.**



Picture 09: Sri Lanka Forum Theatre Programme - Phase II / Kandy District / Photo by: Mohammedu Aswer

எழுதப்படும் அல்லது அரங்கேற்றப்படும் கதையின் பிரதான பாத்திரமே நாயகன் ஆவார். அவன்/அவள் தான் கதையோட்டத்தின் முக்கிய அம்சமாக இருப்பதோடு கதையை மாற்றி விடக்கூடிய முக்கியமான முடிவுகளையும் எடுப்பவர்களாவர். அதனால்தான் அவர்களின் முடிவுகளினுடய விளைவுகளை அவர்களே உணர்ந்து அனுபவிக்கிறார்கள்.

எதிரி என்பவர் கதாநாயகனுக்கு தடைகளை ஏற்படுத்துகின்ற, சவால் விடுகின்ற அல்லது எதிர்க்கின்ற ஒருவர் அல்லது ஒரு குழுவாகும். பெரும்பாலான இடங்களில் இந்தப் பாத்திரம் கதையின் வில்லன் என விபரிக்கப்படுவார்.

## முக்கிய குறிப்புகள்

| 01 | 02 | 03 | 04 |
|---|---|---|---|
| மக்கள் அரங்கு என்பது பிரதான பாத்திரத்தைச் சுழன்று இயங்கும் ஒரு சிறியளவிலான அளிக்கை முறையாகும். மக்கள் அரங்கின் கதையானது ஒடுக்குமுறை பற்றியதாகவோ அல்லது ஒரு சமூகப் பிரச்சினை சார்ந்தே அமைய முடியும். | கதாநாயகனுடைய பலமற்ற நிலையைவிட்டு வெளிவரச் செய்யவும் முரண்பாட்டைத் தீர்த்து வைக்கவும் நடவடிக்கைகளை எடுப்பதைக் குறித்து சிந்திப்பதற்கு பார்வையாளர்களைத் தூண்டிவிடுகிறது. | அளிக்கையானது பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்குமிடையில் ஓர் இணைப்புப் பாலமாக செயற்படும் வழிப்படுத்துனரால் நடத்தப்படுகிறது. அவர் பாரம்பரியமாக ஜோக்கர்ர் என்று அழைக்கப்படுவார். | அளிக்கையானது பார்வையாளர் பங்குபற்றுனர்களால் அவர்கள் பிரதான பாத்திரத்துக்கு உதவும் என நம்புகின்ற தீர்வுகளை அவரின் / அவளின் பலமற்ற பிரச்சினைக்கான உண்மையான மாற்றீடாக முன்வைக்கச் செய்கிறது. |






Picture 10: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Alexanthar Kamilas

# 05
# மக்கள் அரங்கின் பண்புகள்

**மக்கள் அரங்கானது மேலே குறிப்பிடப்பட்டிருப்பது போல பல்வேறு பண்புகளைக் கொண்டிருக்கிறது.**

## 5.1 கருத்துச் சுதந்திரத்தைத் தூண்டுதல்

மக்கள் அரங்கானது அளிக்கையாளர்களது மாத்தி ரமின்றி பார்வையாளர்களினதும் கருத்துச் சுதந்தி ரத்துக்கான தூண்டுதலைச் செய்யும் தனித்துவமான ஆற்றலைக் கொண்டிருக்கிறது. முக்கியமாக அநீதி யை வெளிக்கொண்டுவரவும் அதற்கான மாற்றீ டுகளைக் கண்டடையவும் பேச்சுரிமையின் அவசி யத்தை உணரச் செய்ய பார்வையாளர்களை ஊக்கு விக்கிறது.

வலுவற்றவர்களின் குரலாக இருத்தல்:
மக்கள் அரங்கின் அடிப்படை நோக்கம் ஒடுக்கப் பட்டவர்களை வலுப்படுத்துல் ஆகும்: ஒடுக்கப் பட்டவர்களை ஒடுக்குமுறைகளை விட்டும் வெளிக் கொணருதல். பார்வையாளர்கள் வலுவற்றிருத்த லைப் புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்குவ தோடு, முன்வந்து அதற்கான நம்பத்தகுந்த நடவடிக்கை களை எடுப்பதற்கு தூண்டுகின்றது.

சுய விமர்சனம்: மக்கள் அரங்க அளிக்கையின் போது மேடையிலே நடிகர்களுக்கு மாற்றாக பார்வையாளர்கள் பங்கெடுக்கும் போது பார்வையா ளர் பங்குபற்றுனர்கள் "யார் வலுப்பெற வேண்டியவர்கள்?யாரால் மாற்றங்களைக் கொண்டு வர முடியும்?" போன்ற கேள்விகளை விமர்சன ரீதியாகக் கண்டடைகின்றனர். அதாவது மக்கள் அரங்கு பார்வையாளர்களின் கூர்ந்த அறிவைக் கொண்டு விமர்சனப் பாங்கில் சிந்திக்க வைக்கிறது. சாதாரண உரையாடல்களை விடவும் விமர்சனப் பிரதிபலிப்புகளே மக்கள் அரங்கில் அவசியமா- னவை.

தன்னை அறிந்து கொள்ளல்: பார்வையாளர்களின் தன்னை அறிந்துகொள்ளும் வாய்ப்பை வழங்குவது மக்கள் அரங்கின் இன்னொரு முக்கிய பண்பாகும். வலுவற்றிருத்தலை உணர்தல் என்பதோடு சேர்த்து வலுவற்றிருப்பதைத் தூண்டும் காரணிகள், அதைக் கடப்பதற்கான புத்தாக்க வழிமுறைகள், மற்றும் அதன் மீதான விமர்சனப் பாங்கு என்பன பார்வையாளர்கள் தங்களை உணர்ந்து கொள்ள வழிசமைப்பவை. அவையே சுய சீர்திருத்தத்துக்க- ான முதல் படியுமாகும்.

## 5.2 அநீதியை எடுத்துரைத்தல்

மக்கள் அரங்கு நாடகங்கள் உண்மையான மனிதர்களை உள்வாங்கி இருக்கின்ற உண்மையான பிரச்சினைகளையே பிரதிபலிக்கின்றது. சமூகமானது எவ்வாறு சில குறிப்பிட்ட தரப்புகளை உதாரணமாக விதவைகள், குழந்தைகள், வீட்டுப்பெண்கள், வலது குறைந்தவர்கள் போன்றவர்களை ஓரங்கட்டுகிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

## 5.3 கூட்டு விருப்புக்களைத் தூண்டி மாற்று நடவடிக்கைகளைக் கண்டறிதல்

மக்கள் அரங்கானது சமூக விகாரங்களால் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களையே குறிவைத்து இயங்குகின்றது. நாடகத்தில் அனைத்துப் பாத்- திரங்களும் சமூகத்தையே பிரதிபலிக்கின்றன. அங்கே சமூகத்துக்குள்ளிருந்தே அதன் பிரச்சினை- களுக்கான தீர்வுகளைப் பெறும் ஆர்வம் தூண்டி விடப்படுகின்றது. இன நல்லிணக்கத்தை அழிக்கும் வன்முறை, மற்றும் கடும்போக்குகளைத் தவிர்த்து மாற்றீட்டுத் தீர்வுகளைத் தேடுவதை நோக்கி ஊக்கப்படுத்துகிறது. இதுவே சமூகப் பிரச்சினை- களை சிந்தனை ரீதியாகவும் நேர்வழியிலும் கையாளுவதற்கான உத்தியாகும்.

## 5.4 தீர்வுகளைத் தூண்டுதல்

மக்கள் அரங்கின் குறிக்கோள் எப்போதும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளைத் தருவதல்ல. அநீதியின் மீதும் அதன் பாதிப்பின் மீதுமான ஆழமான புரிதலும் அங்கே தெளிவாக முன்வை- க்கப்படும். மக்களின் செயற்றிறனை மேலும் வலுப்படுத்துவதனூடாக ஒற்றைத் தீர்வுகளை நோக்கி அல்லாமல் பல தீர்வுகளுக்கான வாய்ப்பு- களை நோக்கி அவர்களை வழிப்படுத்துதல். இதன் இலக்கானது ஒருபோதும் சீரானதொரு தீர்வைக் கண்டுபிடிப்பதன்றி நிலைமைகளை ஆராய்ந்து ஒடுக்குமுறைகளை முறியடிப்பதற்கான திட்டங்களை முயற்சிப் பதேயாகும்.

## 5.5 அதிகாரத்தை மக்களின் பக்கம் மீள நகர்த்துதல்

மக்கள் அரங்கின் நெகிழ்வான கட்டமைப்புக் காரணமாக பார்வையாளர் பங்குபற்றுனர்கள் அளிக்கையாளர்களுக்கு நிகரான முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். அரங்க அமைப்பில் அவர்கள் சமமான அதிகாரம் பெற்றவர்களாக மாறுகிறார்கள். மக்கள் அரங்கினை அமைக்கும் செயற் பாடானது அவர்களின் ஆழ்ந்த புரிதலுக்கான வலுவையும்வெளியையும் வழங்குகின்றது. இப் போது நாம் பார்வையாளர்- பங்குபற்றுனர்கள் உரித்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் பெறும் மக்கள் அரங்கின் விடயங்களை நோக்குவோம்.

கதை வசனம்: அதிகமான மக்கள் அரங்க செயற் றிட்டங்களில் இலக்குவைக்கப்பட்ட பார்வையாளர்கள் பற்றிய ஆழ்ந்த ஆய்வின் வெளிப்பாடாக கதை வசனம் அமைகின்றது. சில வேளைகளில் குறித்த சமூகத்தினரிடம் கதை வசனம் கொடுக்கப்பட்டு செம்மைபார்க்கப்ப டுகின்றது. அத்தோடு அளிக்கை நேரத்திலும் பார்வையாளருக்கு கதையில் மாற்றங்களைச் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

நடிகர்கள்: மரபுசார் அரங்குகள் போல இங்கே நடிகர்கள் அதியுயர் அதிகாரத்தைக் கொண்- டிருப் பதில்லை, ஆனால் பார்வையாளர்- பங்கு பற்றுனர்கள் அதைக் கொண்டிருப்பார்கள். உரையாடல்களை வழிப்படுத்துகின்ற, செயல்களை மாற்றுகின்ற, முழு அளிக்கையினதும் விளைவை மாற்றுகின்ற கட்டுப்பாடு அவர்களிடம் இருக்கும்.

தலையீட்டு பொறிமுறை: நாடக அளிக்கையினை தாம் விரும்பும் எந்த நேரத்திலும் நிறுத்துவது பார்வையாளர்களின் உரிமையாகும்: அதில் பின்னூ ட்டம் சொல்வதற்கும், அதில் தலையிட்டு நிலை மைகளை மாற்றுவதற்கும் அவர்களால் முடியும்.

அத்தோடு பார்வையாளர் பங்குபற்றுனர்கள் மதிப் பீட்டாளர்களாகவும் தொழிற்பட்டு மக்கள் அரங்க தயாரிப்பு முறையின் போது நேரடியாக அவ தானித்து மதிப்பிடும் பாத்திரத்தையும் வகிக் கிறார்கள்.

வடிவமைப்பு : ஒரு கட்டுப்பாடான சூழலில்தான் அளிக்கை செய்ய முடியும் என்பதன்றி மக்கள் அரங்கானது மக்கள் கூடுகின்ற எந்தவொரு இடத்- திலுமே நிகழ முடியும். சிற்றுண்டிச்சாலைகளில், விளையாட்டு மைதானங்களில், சந்தையில், பேருந்து நிலையத்தில் அல்லது வீதியில் என எந்த இடத்திலுமே நிகழ்த்தப்பட முடியும். பொதுப் பார்வையாளர்களின் வசதியை இது கவனிக்குமே ஒழிய நடிகர்களினதோ அல்லது ஏனைய குழு உறுப்பினர்களுடையதோ அல்ல.

## 5.6 மக்கள் பங்குபற்றலும் செயற்படுதலும்

அளிக்கையாளர்களும் பார்வையாளர் பங்கு பற்றுனர்களும் ஒன்றாக இணைந்து தலையீடுக- ளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளையும், எண்ணங்களையும் தனிப் பட்ட அனுபவங்களையும் கண்டறிவதனூடாக தோழமையுடனான ஒரு சமூக மாற்றத்தில் பங் கெடுக்கிறார்கள். இந்த மக்கள் அரங்கானது சமத்து வமின்மையையும் பாரபட்சத்தையும் எடுத்துரைக்க உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்த முறைமை மேலும் வேறு பல சூழல்களில் பயன்படுத்தப்பட முடியும்.

நலன்புரி நிலையங்களிலுள்ள அனைத்து வயதி- னருடனும், வேலைத்தளங்களிலும், பாடசாலை களிலும் உள்ள வீடற்றவர்களுடனும் அங்க வீனமுற்றவர்களுடனும் இன்னும் ஒடுக்கு முறையை அனுபவிக்கும் ஏனையவர்களுடனும் இம் முறைமை பயன்படுத்தப்பட முடியும். மக்கள் அரங்கானது வெறும் வார்த்தைகள் அன்றி செயற்பாட்டை மையப்படுத்திய தீர்வுகளைத் தேடவே மக்களை ஊக்குவிக்கிறது.

## 5.7 அணிதிரட்டும் செயன்முறை என்னும் மிகப்பெரும் நன்மை

மக்கள் அரங்கின் மிகப்பெரும் நன்மை யாதெனில் எந்தவொரு சமூக சூழலிலும் அதனுடைய அணி- திரட்டும் தன்மையாகும். பெருந்திரளான மக்களைச் சென்றடைய எந்தவிதமான மட்டுப்பாடோ அல்லது நிபந்தனைகளோ இல்லை. ஆதலினால் அது ஒரு மிதவை அரங்கில் வீதி நாடக வடிவிலும் அளிக்கை செய்யப்பட முடியுமான அதே நேரம் மூடப்பட்ட மண்டப அறையிலும் செய்யப்பட முடியும்.

அதை விட அதன் தயாரிப்புக் கூட கலைத்து றையில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அறிவுடனும் மக்கள் அரங்கில் ஒரு ஆரம்ப அறிவுடனும் மேற் கொள்ளப்பட முடியுமானது, இதற்கு அவசியமாக அறிந்திருக்க வேண்டியது பிரச்சனை குறித்த அறிவு மாத்திரமேயாகும்.

பெரும்பாலும் சமூகத்துக்குள்ளிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட நடிக நடிகைகள் ஊடாகவே மக்கள் அரங்கின் அளிக்கையானது பொதுவெளிக்குக் கொண்டுவரப்படுகின்றது. ஆனாலும் கதை யோட்டத்தின் நம்பகத்தன்மையை இது கொண்டி ருப்பதன் காரணமாகவும் அது மக்களுக்கு நெருக்கமானவர்களாலேயே முன்வைக்கப்படு வதாலும் அளிக்கையின் செயல் திறனானது மிகவும் உயர் தரமானதாக இருக்கிறது, அதுவே நடிகர் களுக்கும் பார்வையாளர்களுக்குமான இடை வெளியைக் குறைக்கிறது.

மக்கள் அரங்கானது முடிந்தளவு மிகக் குறைவா- கவே சாதனங்கள், அலங்காரங்கள், இசை, பாடல்கள் போன்றவற்றை உபயோகிக்கிறது. ஏனெனில் அவையே பார்வையாளர்களுக்கும் அளிக்கையாளர்களுக்குமிடையில் இடை வெளியை விரிவுபடுத்தும் ஊக்கியாகத் தொழிற் படுவன. ஆதலினால் எளிமையே அளிக்கை தினத்தின் ஒழுங்காகக் கொள்ளப்படுகிறது.

## முக்கிய குறிப்புகள்

**01**

மக்கள் அரங்கானது கருத்துச் சுதந்திரத்தை வளர்க்கிறது, சிந்திப்பதற்கான சுதந்திரத்தை அளித்து, ஒரு எண்ணக்கருவை உருவாக்குவதற்கும், சுயத்தைக் கண்டடைவதற்கான குரலை வழங்கியும், பார்வையாளர்களை அரங்கின் மத்தியை அடைய ஊக்கப்படுத்துகிறது.

**02**

வழக்கமான அரங்குகளைப் போல் அல்லாமல் நடிகர்கள், கதைக்கரு, கதையோட்டம், அரங்க அமைப்பு என அனைத்தையும் மாற்றும் அதிகார வலுவை மக்களுக்கே அளிக்கின்றதனூடாக தங்கள் விருப்பத்துக்கேற்ப அதை அமைக்க வழி அமைக்கின்றது.

**03**

மக்கள் அரங்கானது ஒரு கூட்டுமொத்த தீர்வுக்குள் சமூகத்தினைக் கொண்டு வருவதற்கான சாத்தியங்களைக் கண்டடைகிறது... அது மக்களுக்கு மிகவும் பயனுள்ள நடைமுறைத் தீர்வாக அமைவதற்கான வெளிகளைத் திறக்கின்றது.

**04**

மக்கள் அரங்கானது கதாநாயகனின் வாழ்வுக்கு நன்மை தரக்கூடிய தீர்வுகளை முன்வைக்க பார்வையாளர்களை ஆர்வமூட்டுவதன் ஊடாக ஒடுக்கப்பட்ட அல்லது நடுநிலையான பாத்திரங்களைக் கண்டடைய முடியும்.

**05**

மக்கள் அரங்க தயாரிப்புகள் பெரிய விடயங்களாலான எளிய நிகழ்வுகளே அல்லது பெரிய விடயங்கள் சந்திக்கும் இடமாகும். இதற்கு மிகக் குறைந்த சாதனங்களும், அலங்காரங்களும், அமைப்புகளும் மாத்திரமே போதுமானவையாகும்.

**06**

அளிக்கையானது முழுமையாக பார்வையாளர்களதும் பார்வையாளர் பங்குபற்றுனரினதும் ஈடுபாட்டிலேயே தங்கியுள்ளது. அதுவே அவர்களின் தலையீட்டை நடைமுறைப்படுத்தும் முக்கிய பகுதியாகும்.



Picture 11: Sri Lanka Forum Theatre Programme - Phase IV Mannar District / Photo by: Mohammedu Aswer


Picture 12: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Kilinochchi District / Photo by: Mohammedu Aswer

# 06
# மக்கள் அரங்கு முறைமை

**கதாநாயகனால் எதிர்த்துப் போராடத் தெரியாது தோற்றுப் போகும் ஒரு ஒடுக்குமுறையின் சந்தர்ப்பம் கட்டாயமாக காட்சியாக அல்லது அளிக்கையாக முன்வைக்கப்படவேண்டும். தங்களுடைய அனைத்து சாத்தியமான தீர்வுகள், எண்ணங்கள், திட்டங்களுடன் கதாநாயகனை (அல்லது ஒடுக்குமுறைக்குள்ளானவரைப்) பதிலீடு செய்து மேடையில் அளிக்கை செய்ய பார்வையாளர்-பங்குபற்றுனர்கள் அழைக்கப்படுவார் கள். ஏனைய நடிகர்கள் ஒவ்வொரு புதிய தலையீட்டுக்கும் ஏற்ப தங்களது முகபாவனைகளை மேம்படுத்திக் கொள்வார்கள், அதனால் அது அந்த முன்வைப்புக்களை நிஜ வாழ்வில் பிரயோகிப்பதற்கான மெய்யான ஆராய்ச்சியாக மாறுகின்றது. அனைத்து பார்வையாளர்-பங்குபற்றுனர் களுக்கும் தலையிடுவதற்கும் தங்களது எண்ணங்களை அளிக்கை செய்வதற்கும் சம உரிமை இருக்கின்றது. (போல், மக்கள் அரங்கு)**

*செயல்விளைவுடைய மக்கள் அரங்குக்கு மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. அளிக்கை, உரையாடல் மற்றும் குழுமங்கள். முதலாவது ஒடுக்குமுறையின் நிலவரம் அண்ணளவாக 15 நிமிட அளிக்கையாக பாத்திரங்களுடன் முன்வைக்கப்படும். மக்கள் அரங்கின் பாத்திரங்கள் பிரச்சனைகளுக்கான உடன-டித் தீர்வுகளை பார்வையாளர்களிடமிருந்து பெறுவதைத் தூண்டுவதாகவும் பிரதான பாத்திரத்துக்காக யோசிக்க வேண்டியும் தூண்டலைச் செய்கிறது. அரங்க அளிக்கையின் போது பின்வரும் படிமுறைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.*

## அழைத்தலும் இணைத்தலும்

இது அரங்க விளையாட்டுகள், பாடல், இசைத்தல் போன்ற கவர்ச் சியான அரங்கச் செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட முடியும். இதில் கடுமையான அல்லது வேகமான எந்த நிபந்தனைகளும் கிடையாது. இருந்தாலும் பார்வையாளர்கள் நாடகத்தில் முக்கியமான தரப்பு என்ற வகையில் அவர்கள் சிறப்பாக வரவேற்கப்படுகிறார்களா? ஊக்குவிக்கப்படுகிறார்களா? மதிக்கப்படுகிறார்களா? என்பன இதில் மிக முக்கியமாகக் கவனிப்பட வேண்டியவையாகும்.

உங்கள் அணியை அறிமுகப் படுத்துதல்: பார்வையாளர் களுக்குத் தங்களை அறிமுகம் செய்து அவர்களுடனான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வது அளிக்கை யாளர்களுக்கு முக்கியமாகும்.

பார்வையாளர்களை ஒன்றிணைத்தல்: மக்கள் அரங்க அணியினருக்கு இது மிகவும் முக்கியமானதாகும். பார்வையாளர்கள் அளிக்கையை நம்புவதோடு நாடகத்துடனும் அளிக்கையாளர்களுடனும் உணர்வுபூர்வமாகத் தங்களை இணைத்து ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். பார்வையாளர்களை உளரீதியாகவும் உடல் அமைப்பிலும் ஒன்றுபடுத்த வழிப்படுத்துனர் பல்வேறு விளையாட்டுகளையும் பயிற்சிகளையும் செய்ய முடியும்.

எப்படியாயினும் ஏதேனுமொரு காயம் அல்லது நிலைமை பங்குபற்றுதலின் காரணமாக ஏற்படும் போது எவரும் எந்தவொரு விளையாட்டையோ பயிற்சியையோ தொடருவதை நிறுத்த வேண்டும். உதாரணமாக இடுப்பு வலியைக் கூறலாம். மக்கள் அரங்கில் ஒருவர் செய்ய விரும்பாத எதையும் மேற்கொள்ள எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

01

02

### அறிமுகம்

வழிப்படுத்துனர் மக்கள் அரங்கின் எதிர் பார்ப்பினையும் நோக்கத்தினையும் முன்வைப்பார். பின்னர் வழிப்படுத்துனர் ஒடுக்கு முறைக்குள்ளானவரையும் பிரதான பாத்திரத்தின் இலக்கினையும் அறிமுகம் செய்வார். இறுதியில் அவர்/அவள் முதற் சுற்று அளிக்கைக்காக குழுவினரை அழைப்பார்.

03

### முதலாவது காட்சி

முதல் அளிக்கையானது அண்ணளவாக 10-30 நிமிடங்களுக்கு வழக்கமான அரங்கில் நிகழ்த்தப்படும். மொத்தக் கதைக் கருவும் 5-6 காட்சி-களாக பிரிக்கப்பட்டு கதாநாயகனால் (மேலே குறிப்பிட்டது போல) நிகழ்த்தப்படும். முதல் காட்சியானது பிரச்சினைக்கான ஒரு அறிமுகத்தைக் கொடுப்பதோடு அது எவ்வாறு நிஜ வாழ்விலும் பொது மக்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதையும் கதாநாயகனூடாக காண்பிக்கப்படும். கதையானது இறுதியில் முன்வைக்கப்படுகின்ற பிரச்சனையினால் பிரதான பாத்திரம் அனுபவிக்க வேண்டிய இன்னல்களைக் காண்பிப்பதாக நிறைவுறும்.

04

## ஒரே நாடகத்தை மீள அளித்தல்

முதல் காட்சி அளிக்கை நிகழ்த்தப்பட்ட பின்னர் வழக்கம் போல காண்பிக்கப்பட்ட துயருக்கு ஏற்றாற் போலவே தனது குரலை மிகவும் தாழ்த்தியவராக வழிப்படுத்துனர் மேடைக்கு வருவார். அவர்கள் பிறகு பார்வையாளர்களை நோக்கி அவர்கள் அளிக்கை குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதையும் காண் பிக்கப்பட்டது உண்மையான பிரச்சனைதானா என் பதையும் கேட்பார்கள். நடந்த காட்சியை மாற்றுவ தற்கான சந்தர்ப்பம் உங்களுக்குத் தரப்பட்டால் எவ்வாறு நீங்கள் அதைச் செய்வீர்கள்? அல்லது யாரை மாற்றுவீர்கள்?

மக்களிடமிருந்து பிரதிபலிப்புகளைப் பெற்றதன் பிறகு வழிநடத்துனர் எவ்வாறு அதை அளிக்கையில் பிரயோகிப்பது என்பதை அறிவுறுத்துவார். ஒவ்வொரு அளிக்கையாளருக்கும் பாத்திரங்களுக்கும்: ஒடுக்குபவர், ஒடுக்கப்படுபவர், அவர்களின் துணை ஆட்கள், நடுநி லை பாத்திரங்கள் போன்றோருக்கு இடையிலான உறவு குறித்த உரையாடலைச் செய்வதனூடாக வழிநடத்துனர் ஆர்வமூட்டுவார். அத்தோடு பார்வையாளர்கள் காண்பிக்கப்பட்ட காட்சி குறித்து உரையாடவும் கருத்துக்களைப் பகிரவும் ஒரு சந்தர்ப்பம் வழங்குவார்.

உரையாடலின் போது வழிநடத்துனர் பார்வையாளர்களிடம் காட்சி குறித்த ஒரு சுருக்க விவரணத்தைக் கேட்பார். அதே போல அளிக்கை யாளர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு பிரச்சினையைக் குறித்துக் காட்டி அதே பிரச்சினைக்கு முகங்கொடுத்-தவர்கள் உண்டா என்றும் அவர்களுக்கு உடன்பாடாயின் அதைப் பகிர்ந்து கொள்ள முடியுமா என்றும் பார்வையாளர்களை நோக்கிக் கேட்பார். இதன்போது வழிநடத்துனர் உற்சாகப்படுத்தி ஊக்கமளித்து பார்வையாளர்கள் தங்களது சொந்த அனுபவங்களோடும் நடைமுறைத் தீர்வுகளோடும் முன்வர உதவ வேண்டும்.

இறுதியாக இரண்டாவது சுற்று தொடங்க முன்னர் காண்பிக்கப்படப் போகும் காட்சியில் ஒரு மாற்றம் வரவேண்டும் என வேண்டி இதில் தலையிட விரும்பும் பார்வையாளர் எவ்வாறு தன் கைகளை உயர்த்தி "நிறுத்து" என்று கூற வேண்டும் என்ற அறிவுறுத்-தல்களையும் அதனூடாக எவ்வாறு பார்வையாளர் பங்காளராகி உரையாடப்படும் பிரச்சனை குறித்த தனது கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பமாக இது அமை கிறது என்பதன் விவரணங்களையும் முன்வைப்பார்.

05

## தலையீடு

மக்கள் முன்வைக்கப்படும் பிரச்சனைக்குத் தாம் பொருத்தமான தீர்வுகளாக எண்ணுபவற்றுக்காக பாத்-திரங்களை மாற்ற முடியும்.

ஒவ்வொரு பார்வையாளர்- பங்குபற்றுனரும் நாடக மீள் அளிக்கையின் போது தமக்கு அறிவுறுத்தப்பட்ட முறை யில் தலையிட முடியும், அதன் போது நடிகர்கள் "உறைந்த"வர்களாக அசைவற்று மேடையில் நிற்க மக்கள் மேடையில் நுழைந்து தாம் விரும்பிய பாத்தி ரத்தை பதிலீடு செய்து அளிக்கை செய்யத் தொடங் குவார்கள்.

காட்சியில் காண்பிக்கப்பட்ட பிரச்சனைக்கான தீர்வை பிரதான பாத்திரத்தினால் கண்டடைய முடியாத போது அங்கே அவருக்குப் பதிலீடாக பார்வையாளர் முன்வருகிறார். இதன் மூலம் ஒடுக்கப்பட்ட பாத்தி ரத்தை வலுப்படுத்த முடிவதோடு அவருக்கு நிகழும் அநீதி அல்லது ஒடுக்குமுறைக்கு எதிரான நிலைப் பாட்டை உறுதியாக எடுக்க முடிகிறது.

ஆதலினால்தான் பார்வையாளர் பங்குபற்றுனர்கள் காட்சியின் எந்த நேரத்திலும் எந்தவொரு தருணத்திலும் தன்னால் கண்டடையப்பட்ட தீர்வை முன்வைப்பதற்காக தலையிட முடியும்.

பார்வையாளர்- பங்கேற்பாளர் தலையிடுவதனூடாக பல விடயங்களைச் செய்ய முடியும்.

அ. புதியதொரு பாத்திரமாக முன்வரல்
ஆ. துணை நிற்பவரைப் பதிலீடு செய்தல்
இ. பிரதான பாத்திரத்தைப் பதிலீடு செய்து பாத்திரத்தின் நோக்கில் தீர்வுகளை முன்வைத்தல்

உண்மையான தருணத்தில் வழமையாக இருக்கின்ற சில எதிர்ப்புகளுக்குப் பின்னர் எதிர்த்தரப்பினர் முன்வைக்கப்பட்ட தீர்வுகளின் உறுதித்தன்மையைக் கொண்டே செயற்படுபவர்களாக ஆகிவிடுவர். அதிலிருந்து பார்வையாளர்- பங்குபற்றுனர்கள் பிரச்சனைகள் மெதுவாக நல்ல மாற்றங்களை அடைவதை அவதானிப்பர். தீர்வுகளைத் தேர்ந்தெடுத்த பின்னர் அவற்றை காட்சியில் முன்வைத்த பிரச்சனைகளுக்கான நல்ல தீர்வாக எவ்வாறு அன்றாட வாழ்வில் பிரயோகிப்பது என்பது குறித்த உரையாடல் இடம்பெறும்.

## தலையீட்டுக்கான அறிவுறுத்தல்கள்

1. *பார்வையாளர்- பற்குபற்றுனர் மேடைக்கு வந்து அவர் தன்னால் தீர்வு கொடுக்க முடியுமென்று நம்பும் பிரச்சனையை முன்வைத்த பாத்திரத்தின் இடத்தை எடுப்பார்.*

2. *அவர்கள் எதிர்காலத்தில் யாராக வரமுடியும் என்று நம்புகிறார்களோ அவர்களின் பாத்திரத்தையே தெரிவுசெய்ய வேண்டும்.*

3. *பார்வையாளர்-பங்குபற்றுனர் ஒடுக்குமுறையாளரின் பாத்திரத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. மேடையில் நிறுத்தப்பட்ட உண்மையான நடிகர்கள் பார்வையாளரோடு சேர்ந்து அவர் பயன்படுத்-தப்போகும் உத்திகள் குறித்து பகிர்ந்து கொள்வர்.*

4. *பௌதீக தலையீடுகள் அறவே கூடாது: ஏதேனும் உடலியல் சார்ந்து பார்வையாளர் அங்கத்தவர் செய்யப்போகிறார் என்று நீங்கள் உணர்ந்தால் உடனேயே நேர முடிவைக் கோரி அவருடன் அதை உரையாட வேண்டும்.*

5. *பார்வையாளர் தனது தலையீட்டினை நிறைவு செய்ததன் பிறகு வழிநடத்துனர் பார்வையாளர் அங்கத்தவர், நடிகர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்களுக்கு விரிவாகவும் விபரித்து அவர்களை உணர்வுபூர்வமாக காட்சிக்குள் ஈடுபடுத்த வைப்பார்.*

## பார்வையாளர்களை ஒன்றிணைக்கும் அறிமுக விளையாட்டுக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

### நாவுச் சுழற்றிகள்

*இது காட்சிக்கு முன்னர் பார்வையாளர்களை சௌகரியமாக்குவதற்காக விளையாடும் விளையாட்டாகும். அனைவரையும் கீழ்வரும் வரிகளை சத்தமிட்டு உச்சரிக்கும் இந்த நாவுச் சுழற்றி விளையாட்டுக்கு அழைக்கவும்.*

**There's a chip shop in space, which sells space ship shaped chips**

**I like New York, unique New York, I like unique New York**

**Rubber baby buggy bouncers Floppy fluffy puppies, floppy fluffy puppies**

**The sixth sick sheiks sixth sheeps sick**

*குறிப்பு: இந்த விளையாட்டை உள்நாட்டு மொழிகளிலும் பின்வருமாறு விளையாட முடியும்.*

*சிங்களத்தில்*
*சூட்டி டீச்சர்கே சூட்டி டோர்ச் எக*

*தமிழில்*
*கொக்கு நெட்டக் கொக்கு*
*நெட்டக் கொக்கு இட்ட முட்ட கட்ட முட்ட*

### ஒலி விளையாட்டு

*உங்களைக் கவனமாகக் கிரகிக்குமாறு பார்வையாளர்களை அழையுங்கள். இரண்டு ஒரே மாதிரியான உச்சரிப்பும் வெவ்வேறு பொருளும் கொண்ட சொற்களை உச்சரியுங்கள்.*

*பிறகு நீங்கள் கூறும் ஒழுங்கில் பார்வையாளர் களை திரும்பச் சொல்லும்படி கூறுங்கள்.*

*அத்தகைய சொற்களாவன*

*தமிழில்*
*சோறு சம்பல்*

*சிங்களத்தில்*
*கரபிஞ்சா ஹாபஞ்சா*

*ஆங்கிலத்தில்*
*பொடேடோ டொமாடோ*




## முக்கிய குறிப்புகள்

| 01 | 02 | 03 | 04 | 05 |
|---|---|---|---|---|
| **நுணுக்கங்களைப் பற்றிக் கலந்துரையாடும் போது தலையீடு என்பது யதார்த்தமானதா என்று கேட்கக் கூடாது, ஏனெனில் இந்த வகையான கேள்விகள் மாற்றம் என்பது சாத்தியமற்றது என்பதை மனதில் விதைத்துவிடும். பதிலாக தலையீடு என்பது சாத்தியமானதா என்று கேட்கவும்.** | **எதைப் பற்றியது? எதைப் பற்றி அல்லாதது, இங்கே விடயம் யாதெனில் அடுத்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கிறோம் என்பதல்ல- இது அறிவுரைக்கான அரங்கு இல்லை. இதன் பிரதான விடயமே நம்மால் என்ன செய்ய முடியும் என்பதே.** | **மக்கள் அரங்கு என்பது முடிவுகளை மேற்கொள்கின்ற கருவியோ அல்லது பார்வையாளர்களின் பார்வைக் கோணங்களை அறிந்து கொள்கின்ற முறைமையோ அல்ல.** | **பங்குபற்றும் பார்வையாளர்கள் கற்றுக் கொள்ளும் முக்கியமான பாடமே அவர்கள் தலையிடாத வரை வாழ்வில் எதுவுமே மாறாது என்பதாகும்.** | **பங்குபற்றும் பார்வையாளர்கள் கண்டுகொள்ளும் இன்னொரு விடயம் "ஏதாவது ஒன்று" என்பது எப்போதுமே போதுமானது அல்ல. அது மிகவும் திட்டமிடப்பட்டதாக இருக்க வேண்டும். அதனால் செயற்பாடும் திட்டமிடப்பட்டதாக இருக்க வேண்டும்.** |

# மக்கள் அரங்கு விளையாட்டுக்களும் பயிற்சிகளும்

ஒவ்வொரு மக்கள் அரங்கச் செயற்பாடும் அதிகமான நடைமுறைப் பயிற்சிகளோடு தொடர்புபடுகின்றன, அளிக்கையாளர்களுக்கான குழுக்களை அமைக்கவும் அளிக்கையின் வடிவத்தைப் புரிந்து கொள்ளவும் ஒடுக்குமுறையின் பிரச்சனையைப் புரிந்து கொள்ளவும், கதைகள், பாத்திரங்கள் மற்றும் ஒட்டுமொத்த திறன் வெளிப்பாட்டுச் செயன்முறைகளை அறியவும் என பல விடங்களை உள்ளடக்கியது. பின்வருவன அவற்றில் சில உதாரணங்களாகும்.

*01. இரட்டைகள்*

குறிக்கோள்கள்

- ☐ குழு இயக்கப்பாட்டை பலப்படுத்தல்.
- ☐ மக்கள் அரங்கின் கொள்கைகளையும் வடிவத்தையும் குழுக்களுக்குப் புரிய வைத்தல்.

குழு அங்கத்தவர்களை சோடிகளாகப் பிரிக்கவும். இவ்விருவராக அவர்கள் முகங்களைப் பார்த்தபடி தங்கள் முழங்கால்களில் கைகளை ஊன்றி நிற்க வைக்கவும். அவர்கள் முன்னே நிற்கும் தம் போட்டியாளரின் முழங் கால்களைத் தொடுவதனூடாக புள்ளிகளைப் பெறமுடியும். அவ்வாறு செய்வதாயின் அவர்கள் தமது முழங்காலிலிருந்து கைகளை எடுக்க வேண்டும். அதன்போது அவர்கள் தாக்கப்படும் அபாயம் இருக்கிறது. இதில் முதல் 3 புள்ளிகளை எடுப்பவர் வெற்றியாளராவார்.

மாறுபாடுகள்

குழு அங்கத்தவர்களை சோடி சோடியாகப் பிரிக்கவும். அவர்களின் ஒரு கையைப் பின்பக்கமாக கட்டி ஒருவரை ஒருவர் பார்த்து நிற்க வைக்கவும். மற்றக் கையை ஒரு வாள் போல பாவனை செய்ய வைத்து அதன் சுட்டு விரலை வாளின் முனையாக்கவும். அவர்கள் மோதி தம் எதிராளியின் உள்ளங்கையைச் சுட்டுவிரலால் தொட வேண்டும். முதல் 3 புள்ளிகளை எடுப்பவர் வெற்றியாளராவார்.

பின்னூட்டத்துக்குப் பயனுள்ள கேள்விகள்

- ☐ வெற்றி / தோல்வியை எவ்வாறு உணர்ந்தீர்கள்?
- ☐ உங்கள் பங்காளர் உங்களை விட கூடுதல் வலுமிக்கவரா?
- ☐ போட்டித்தன்மையுடன் எவ்வாறு முன்தொடர்ந்தீர்கள்?
- ☐ வெற்றியை எவ்வாறு கொண்டாடினீர்கள்?

*02. முகத்தைக் கண்டு பிடித்தல்*

குறிக்கோள்கள்

- ☐ உடலியல் தடைகளை உடைத்தல்.
- ☐ உணர்வு சார் வேலைகளைக் கண்டடைந்து தொடர்தல்.

பங்கேற்பாளர்களிடம் அறையில் தங்களுக்கு என்றொரு இடத்தை தெரிவு செய்யச் சொல்லுதல். பின்னர் அவர்களின் கண்களை மூடச் சொல்லி அமைதியாக இருக்கும்படி கேட்டல். ஒவ்வொருத்தராக எழுந்தமானமாக ஜோடிகளாக்கி மெதுவாக அனைவரையும் வழி நடாத்துதல். கண்களை மூடியபடி தமது இணையின் உள்ளங்கைகளோடு தம் உள்ளங் கைகளை ஒட்டியபடி கண்களை மூடி நிற்க வைத்தல். பின்னர் அவர்களின் தோள்கள், கழுத்து பிறகு முகத்துக்கு கைகளை அசைக்கச் சொல்லுதல். தமது முன்னே உள்ளவரின் முகத்தை கைகளால் தடவி அவர் பற்றிய ஒரு உருவத்தினைக் கண்களை மூடியபடி மனதுக்குள் பதித்துக் கொள்ள வேண்டுதல். பிறகு அவர்கள் கண்களைத் திறக்க முடியும்.

*03. வட்டத்தை உடைத்தல்*

குறிக்கோள்கள்

- ☐ கதாநாயகனின் கடினங்களைக் கண்டடைதல்.
- ☐ தாக்குதலின் தன்மையைக் கண்டடைதல்.
- ☐ ஒடுக்குமுறைக்கும் பாரபட்சத்துக்குமான நுணுக்கமான அணுகுமுறைகளைக் கண்டடைதல்.

அனைவரையும் ஒரு வட்டமாக நிறுத்தி ஒருவரை நடுவில் நிறுத்துதல். நடுவில் நிற்பவரின் இலக்கு வட்டத்துக்கு வெளியில் செல்வதாகும். வட்டமாக நிற்பவர்கள் அவரைத் தடுக்க வேண்டும். நடுவில் நிற்பவரை மாற்று வழிகளைப் பயன்படுத்தியாவது தப்பிக்கத் தூண்ட வேண்டும். குழுவிடமிருந்து பின்னூட்டக் கருத்துக்களைப் பெறுவதோடு பலரை நடுவில் நிறுத்தி இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்ய முடியும்.

*04. தலைவரை ஊகித்தல்*

*குறிக்கோள்கள்*

- ☐ *சாத்தியமான ஒடுக்குமுறைகளைக் கண்டடைய ஆரம்பித்தல் (ஒரு தனி நபர் மீதானகுழுவாத அதிகாரம், குழுவாத மனப்பாங்கு, அறிவின் அதிகாரம், பாரபட்சம் காட்டப்பட்ட சிறு பான்மையினரின் துன்பம், கதாநாயகரின் போராட்டம்)*

அனைவரையும் வட்டமாக நிறுத்தி வைத்து ஒருவரை முன்வரச் சொல்லுதல். அவரை அறையை விட்டு வெளியேறச் சொல்லுதல். பின்னர் இன்னொருவரை குழுவிலிருந்து முன்னே வரச் சொல்லுதல். அவரைத் தலைவர் என குழுவுக்கு அறிவித்தல். தலைவரானவர் தொடர்ந்தும் அசைந்து கொண்டு இருப்பார். அதை குழு முழுவதும் பின்பற்றும். தலைவரைத் தொடர்ந்தும் அசைவுகளை மாற்ற அறிவுறுத்துக.

வெளியே நிற்கும் அங்கத்தவர் உள்ளே வந்து யார் தலைவர் என்பதைக் கண்டுபிடிக்க இருக்கிறார் என்பதைக் குழுவுக்கு விபரிக்குக. தலைவரும் குழுவும் சேர்ந்து தமது துரித செயலினால் தலைவர் யாரென்று காட்டிக் கொள்ளாது செயற்பட வேண்டும்.

இதை வெவ்வேறு நபர்களைக் கொண்டு, தலைவர்களை மாற்றி விளையாடி பயிற்சி பெற முடியும்.

*05. வெடிகுண்டும் கேடயமும்*

*அபாயத்தின் கருவைக் கண்டறிதல்*
*திட்டமிட்ட சிந்தனையைக் கண்டறிதல்*

பங்குபற்றுபவர்களை சுற்றி நடக்கச் சொல்லுங்கள். அவர்கள் நடக்கும் போது இரண்டு பேரை தெரிவு செய்யச் சொல்லுங்கள். அவர்கள் யாரைத் தெரிவு செய்தார்கள் என்பதைத் தங்கள் மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும். யாருக்கும் வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது. அதில் ஒருவர் வெடி குண்டு, மற்றவர் கேடயமாகும். இந்தப் பயிற்சி உங்களுக்கும் வெடிகுண்டுக்கும் இடையில் உங்கள் கேடயத்தை நிறுத்தி வைப்பதற்கானது என்பதை விளக்கவும்.

சில நிமிடங்களுக்குப் பிறகு அனைவரையும் அப்படியே "நிறுத்த"ச் செய்து குழுக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை அவதானிக்கவும். நீங்கள் குண்டு வெடிக்கப்போகும் நேர விநாடிகளை அறிவித்து மக்கள் பாதுகாப்பாக உள்ளனரா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

*பின்னூட்டத்துக்கான கேள்விகள்*

- ☐ *நீங்கள் பதற்றமடைந்தீர்களா?*
- ☐ *நீங்கள் ஏதேனும் உத்திகளைக் கையாண்டீர்களா?*
- ☐ *அவை என்ன உத்திகள்?*




Picture 13: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Mannar District / Photo by: Mohammedu Aswer

# 07 இலகுபடுத்துனரின் வகிபங்கு

பாரம்பரியமாக ஜோக்கர் என அழைக்கப்படும் வளப்படுத்துனர் நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையிலான பாலமாகச் செயற்படுவார். அவர் எந்த ஒரு தனிக் குழுவினதும் விருப்புக்கு ஏற்ப செயற்பட முடியாது. அவர் பார்வையாளர்களின் யதார்த்தத் தன்மைக்கும் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டதற்கும் இடையில் தொடர்புகளை உருவாக்குபவராக செயற்படுவார். இலட்சியவாத இலகுபடுத்துனர் ஒருவர் மக்கள் அரங்கானது ஒரு வெற்றிகரமான தயாரிப்பாக அமைவதற்கு பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்கப் போராடுவார்: அளிக்கையானது தனது இலக்கை அடைவதில் குறியாக செயற்படுவார், அதனால்தான் அவர் அரங்கத்தின் ஊடாக இலக்கு வைக்கப்படும் சமூகப் பிரச்சனை குறித்து ஆழ்ந்த அறிவு கொண்டிருக்க வேண்டும். அத்தோடு சமூகத்தின் பின்னணியும், சாத்தியமான சட்ட விடயங்களும் பற்றி ஆழமான புரிதலையும் அறிவையும் கொண்டிருக்க வேண்டும். மனித உரிமை, ஜனநாயகம்,அரசியல், சமூக அதிகாரம் கட்டமைப்பு மற்றும் சுகாதார விடயங்களிலும் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளும் மொழியிலும் நுட்பமான அறிவு கொண்டவராக இருக்க வேண்டும்.

**01**
அவர் உடனடியான மாற்றங்களை நிகழ்த்துபவர் அல்லர். அதனால் அவரால் மக்களுக்கு ஆலோசனை வழங்க முடியாது. மாறாக அவரால்/ அவளால் விமர்சன ரீதியாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்திப்பதற்கு ஊக்கப்படுத்த மட்டுமே முடியும்.

**02**
நாடகத்தில் உள்ள அதிகாரத்தின் இயக்கத்தை விளக்குதல். அளிக்கையாளர்களை ஊக்கப்படுத்தி உதவுதல். தனது சொந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கு ஆலோசனை வழங்குவதை தவிர்த்தல்.

**03**
திறந்த, தூண்டுகிற, தகுதிவாய்ந்த கேள்விகளைக் கேட்பதன் மூலம் பார்வையாளர் பங்கேற்பை அதிகமாக ஊக்குவித்தல். மிகக் குறைந்த அளவிலான மிகவும் சக்திவாய்ந்த பார்வையாளர்களை அதிகம் பேச வைக்கின்ற கேள்விகளைக் கேட்டல்.

**04**
பார்வையாளர்களை மென்மையாக வைத்துக் கொள்ளவும் அவர்களின் கவனத்தினைப் பெறவும், தெளிவானதும் சிறந்ததுமான தொடர்பாடலைப் பேணவும் நகைச்சுவையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துதல்.

**05**
பார்வையாளர்கள் எடுத்துரைக்கும் உணர்ச்சிகளைக் கவனமாக அவதானிப்பதோடு அவற்றுக்குக் கவனமாக பதிலிறுத்தல். ஆற்றுகைக்கும் பார்வையாளர்களுக்குமிடையில் சிறந்த உரையாடலை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த எண்ணக்கருக்களை உருவாக்குதல்.

**06**
காட்சிக்கு முதலும் காட்சியின் போதும் காட்சிக்குப் பிறகும் பார்வையாளர்களுக்கு முன்வைக்கப்பட்ட சவால்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிர்வினையாற்றுதல்.

**07**
இலகுபடுத்துனர் கட்டாயமாக ஒரு ராஜதந்திரியாக செயற்பட வேண்டும். ஒரு பார்வையாளர் இன்னொருவரின் தலையீட்டோடு பல காரணங்களால் முரண்பட முடியும். இது மிகவும் நுணுக்கமாகவும் மென்மையாகவும் கையாளப்பட வேண்டும்.

**08**
இலகுபடுத்துனரின் வகிபங்கு விவாதத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதும், உண்மையான பிரச்சனையை வெளிக் கொணருவதும், உரையாடலானது திசை திரும்பாமலும் ஒரே விடயத்துக்குள் சிக்கி விடாமலும் பார்த்துக் கொள்ளுதல்.

**09**
அவசியப்படும்போது விரைவான வாக்கெடுப்புகளை மேற்கொண்டு பொதுவாக கூட்டு அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புதல். அமைதியைக் கொண்டே அமைதிக் கலாசாரத்தை மேம்படுத்த முயலுதல்.

**10**
தொடர்ந்தும் விவாதத்தை சொந்தக் கருத்துக்களால் வழி மாற விடாமல் விடயப் பரப்புக்குள் கொண்டு வரல்.

**11**
எந்தவொரு பார்வையாளரையும் தோற்றுப் போகும் மனப்பாங்கு வந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்கு அவர்களின் ஒவ்வொரு முயற்சிக்கும் கருத்துக்களுக்கும் பாராட்டைத் தெரிவித்தல்.

**12**
மிக வேகமாக இயங்கி குறித்த நிலவரங்களை உடனடி ஆய்வு செய்து குறிப்புக்களை வழங்கவும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பொருத்தமான பதில்களை வழங்கவும் தயாராக இருத்தல்.




Picture 13: Sri Lanka Forum Theatre Programme - Phase III / Kalutara District / Photo by: Mohammedu Aswer

# 08 ஒத்திகைச் செயற்பாடு

மக்கள் அரங்கு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக மாற்ற ஒத்திகை என்பது அடிப்படையான ஒரு அம்சமாகும். பின்வரும் சாத்தியமான படிமுறைகள் ஒத்திகை செயற்பாட்டை வினைத்திறனுள்ளதாக மாற்ற அவசியமானவை.

1. முன்பயிற்சிகளோடு ஆரம்பித்தல்: முன்பயிற்சியோடு ஆரம்பிக்கும் போது அது குழு மனோநிலையை வளர்க்கிறது. அத்தோடு நடிகர்களுக்கும் அவர்களின் குரலையும் உடலையும் தயார் செய்து கொள்ள பெரிதும் உதவும்.

2. பிரதான முரண்பாடு குறித்த விபரம்: பார்வையாளர்களுக்கு பிரதானமான முரண்பாடு அல்லது கவனம் குவிக்கும் விடயத்தை சுருங்கக் கூறுதல்.

3. ஒரே வரியில் குறிப்பிடுக: நடிகர்களுக்கு மூலப் பிரச்சினை குறித்த அல்லது முரண்பாடு குறித்த விபரங்களை வழங்கும் போது அதை ஒரே வரியில் இலகுவாகவும் சுருக்கமாகவும் கூறுதல். அது ஒற்றையானதாகவும், தனித்துவமானதாகவும், இலகுவானதாகவும் இருக்க வேண்டும்.

4. பாத்திரங்களை விளங்கப்படுத்துதல்: அனைத்து பிரதான பாத்திரங்களையும் ஒரே தடவையில் அறிமுகப்படுத்துதல். இது நாடகத்திலுள்ள பாத்திரங்களை முழுமையாக அறிந்து கொள்ள பெரிதும் உதவும்.

5. பாத்திரத்தின் சுயவிபரத்தை விளக்குதல்: அனைத்துப் பாத்திரங்கள் பற்றிய விபரமான வாசிப்பு அவர்களின் உடலியல் தன்மைகள், உணர்வுகள், நடத்தைகள், காயங்கள் கனவுகள் மற்றும் முரண்கள்.

6. யார் கதாபாத்திரம்?, யார் வில்லன்? யார் நடுநிலையாளர்? என்பவற்றை அவர்களின் பாத்திரப் பண்புகளோடும், நோக்கங்களோடும் விளக்குதல்.

7. முழு அணிக்கும் முதலில் இது கதாநாயகன் பற்றிய கதை என்பதை விபரிக்கவும். முதலில் முழுக் கதையையும் அவர்களுக்கு விபரிக்கவும். இது முழுக் குழுவினரும் கதைக்கு ஏற்றால் போல தங்களைத் தயார்படுத்திக் கொள்ள உதவும்.

8. முதன்மையான தலையீட்டுக் கருத்துக்களை விபரிக்கவும்: இது இறுதியாக பார்வையாளர்களாலேயே தீர்மானிக்கப்படும். கேள்விகளைக் கேட்டு நடிகர்கள் அனைவரும் பாத்திரங்கள் மற்றும் கதை ஆகிய இரண்டையும் பூரணமாகப் புரிந்து கொண்டனரா என்பதை அறிந்து கொள்ளவும்.

9. ஒவ்வொரு செயல்களாக பயிற்சி எடுத்தல்: கவனம் குவிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு பகுதியையும் விபரிக்கவும். மேடைச் சமநிலை, கண் தொடர்பாடல், குரல், நிலை போன்றவற்றோடு பாத்திரமானது வழங்கப்பட்ட வேலையை பிரதிபலிக்கிறதா என்பதையும் அடுத்த உறுப்பினர்களோடு உரையாடலில் ஈடுபடுகிறதா என்பதையும் பரிசீலித்துக் கொள்ளல்.

10. ஒவ்வொரு காட்சியாக விபரிக்கவும். முழு ஒத்திகையை மேற்கொள்ளவும், தொடரான ஒத்திகைக்கு நேரம் ஒதுக்கவும். எதிர்காலத்துக்கு அவசியமான பொருட்களை விபரிக்கவும்.

| குறிப்புக்கள் | | |
|---|---|---|
| | 01 | 02 |
| | அனைவரும் சமமாகப் பங்குபற்றுவதோடு பார்வையாளர்கள் பாத்திரங்களைப் புரிந்து கொள்ள உதவ வேண்டும். | சுயவிபரத்திலிருந்து முக்கியமான விடயங்களை அறிவதோடு கேள்வி பதிலுக்கு இடமளித்தல். |



Picture 13: Sri Lanka Forum Theatre Programme - Phase II / Training Workshop / Photo by: Mohammedu Aswer

# 09
# கதை விருத்தி

அங்கே கதை இல்லையாயினும் மையப் பிரச்சனையோ முரண்பாடோ இன்றி விவாதம் இல்லை. பார்வை யாளர்களை கவர்ந்து கற்பனையையும் பொழுதுபோக்கையும் தக்கவைத்துக்கொள்ளவும். அங்கே மையப் பிரச்சனை அல்லது முரண்பாடு இருக்க வேண்டியது கட்டாயமாகும். நீங்கள் ஒரு மையப் பிரச்சனையுடன் அல்லது முரண்பாட்டை எடுத்து வருகிற போது அது நாடகத்தில் தொடர்புபடுத்தப்படும் பாத்திரங்களின் நாடக செயல்களினூடாக உருமாற்றம் பெற்று சீர்திருத்தப்பட்டு தீர்த்துவைக்கப்பட வேண்டியிருக்கிறது. மக்கள் அரங்குக்கு ஆற்றுகையானது விளைவுள்ளதாக இருக்க வேண்டுமென்பதால் சமகாலத்தின் முக்கிய முரண்பாடு அல்லது பிரச்சனையை குவிமையப்படுத்துவது வலியுறுத்தப்படுகிறது.

## 01. முரண்பாடும் ஒடுக்குமுறையும்

முரண்பாடும் ஒடுக்குமுறையும் இரு வேறு கருத்து வடிவங்களாகும். முரண்பாடே ஒடுக்குமுறையைத் தோற்றுவிக்கிறது. அத்தோடு முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஒடுக்குமுறைக்கு ஆளாக முடியும். சில நேரங்களில் ஒடுக்குமுறைக்குள்ளானவர் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவருக்கு மிகவும் நெருங்கியவராக இருக்கிறார்.

## 02. வலுமிக்க பாத்திரங்களை உருவாக்குதல்

பாத்திரம் என்பது எளிய மொழியில் கதையைச் சுமந்து செல்கின்றவாகனம் ஆகும். மக்கள் அரங்கைப் பொறுத்த வரை பாத்திரம் என்பது பெரும்பாலும் மனிதர்கள், அதிலும் அன்றாட வாழ்வில் நாம் காணும் மனிதர்கள். பெறுமானங்களில், வழக்காறுகளில், உடலியல் பண்புகளில், உணர்ச்சி வெளிப்பாடுகளில், அனுபவத்தில், நற்பாத்திரங்களின் ஆர்வங்களில் ஒற்றுமைகளை பார்வையாளர்கள் கண்டுபிடிப்பர்.

அத்தோடு சமூகத்தில் உண்மையான ஒருவரின் பண்புகளை அது பிரதிபலிக்க வேண்டும். அப் பண்பு களாவன:

1. இயல்பில் தனித்துவமாய் இருக்கின்றது.
2. வேறுபட்ட உடலியல் தன்மையைக் கொண்டிருக்கின்றது.
3. தனித்துவமான நடத்தைப் பண்புகளைக் கொண்டிருக்கிறது.
4. தனித்துவமான உணர்ச்சித் தேவைகளால் வழிநடாத்தப்படல்.
5. காயங்களைக் கொண்டிருத்தல்
6. கனவுகளோடு இருத்தல்
7. உள்மன முரண்களைக் கொண்டிருக்கிறது.
8. கதையின் தேவைக்கு ஏற்ப செயற்படுகின்றது.

## 03. வலுமிக்க பாத்திரங்களை உருவாக்குவது எப்படி?


*உணர்வு ரீதியாக வலுமிக்க பாத்திரங்களை உருவாக்க பல்வேறு வழிமுறைகள் உள்ளன. கீழே அவற்றில் சில தரப்படுகின்றன:*

1. உங்களிடம் ஒரு முரண்பாடு அல்லது பிரச்சனை அடையாளப்படுத்தப்பட்டிருப்பதை நினைத்தல்.
2. உங்களிடம் பிரச்சனையோ அல்லது முரண்பாடோ அடையாளம் காணப்பட்டிராவிட்டால் நீங்கள் அதனை முதலில் ஏற்படுத்த வேண்டும்.
3. பாத்திரங்களை வடிவமைக்கத் தொடங்க முன்னர் அவற்றை ஆழ்ந்து நோக்க வேண்டும்.
4. உங்கள் பங்குபற்றுனர்களை சம அளவான எண்ணிக்கை உள்ள குழுக்களாகப் பிரியுங்கள்.
5. ஆகக் குறைந்தது நான்கு அல்லது ஐந்து குழுக்கள் போதுமானவை.
6. ஒவ்வொரு குழுவினரிடமும் அவர்களுக்கு மிக நெருக்கமானவரோடு தங்கள் பிரச்சனைகளை அல்லது முரண்பாடுகளை உரையாடக் கேட்டல்.
7. இந்த நபர் முரண்பாட்டோடு மிகவும் தொடர்புபட்டவர் அல்லது இவர் இந்த சூழலிற்குள் வாழ பழக்கமானவராய் இருக்கிறார் எனக் கூற முடியும்.
8. பெரிய தாள்கள் அல்லது A4 தாள்களை வழங்குங்கள்.
9. ஒவ்வொரு குழுவிடமும் ஆகக் குறைந்தது ஒரு பாத்திரமாவது உருவாக்கக் கோருங்கள்.
10. அவர்கள் கதாநாயகனையோ வில்லனையோ அல்லது நடுநிலையாளனையோ உருவாக்கத் தேவையில்லை. ஒரு வலுமிக்க பாத்திரத்தை உருவாக்குவது குறித்து அவர்கள் இயங்கினால் போதுமானது.

பின்வரும் கேள்விகளை அவர்களின் குழுவில் கேட்க வழிப்படுத்துங்கள்

- ☐ தெரிவுசெய்யப்பட்ட பாத்திரத்தின் குடும்பப் பின்னணி யாது?
- ☐ உங்கள் பாத்திரத்தின் தனித்துவமான உடல் தோற்றத்தை எவ்வாறு விபரிப்பீர்கள்?
- ☐ உங்கள் பாத்திரத்தின் தனித்துவமான நடத்தைகள் எவை?
- ☐ உங்கள் பாத்திரத்தின் தனித்துவமான உணர்ச்சிகள் எவை?
- ☐ உங்கள் பாத்திரத்தின் தேவைகள் என்ன?
- ☐ உங்கள் பாத்திரம் கொண்டிருக்கும் காயம் என்ன?
- ☐ கனவு என்ன?
- ☐ உங்கள் பாத்திரத்தின் உள்முரண்கள் எவை?
- ☐ சமூகத்திலுள்ள அடுத்தவர்கள் எவ்வாறு உங்கள் பாத்திரத்தை விபரிப்பார்கள்?
- ☐ சமூகத்தில் உங்கள் பாத்திரம் எந்தளவு தூரம் தனித்துவமானது என்பதைக் கூறுக?

*சில நேரங்களில் கதையின் கதாநாயகன் யார்? என்பதை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமாகிவிடும். பல கதைகளில் பாத்திரங்கள் இலகுவான அமைப்புள்ளவை அல்ல அவை நாடகத்தினூடாக மாற்றப்பட முடியுமானவை. சில கதைகள் அதிகமாக கதாநாயகர்களை அல்லது வில்லன்களைக் கொண்டிருக்கும். ஆனால் கதாநாயகன் அல்லது வில்லன்கள் அவர்களுக்கு யார்?அது என்ன பொருள் படும்? அவை கதையில் எந்தப் பாத்திரங்களை முன்வைக்கும்?*



### வில்லன்

*வில்லன் என்பது பொதுவாக ”கெட்ட நபர்” ஆனால் பொதுவாக பிரதான பாத்திரத்தை அல்லது கதாநாயகரை எதிர்க்கும் நபராகும்.*

## 04. பாத்திர முன்வைப்புக்கள்


பாத்திர முன்வைப்பு என்பது குழுக்கள் தாம் உருவாக்கிய பாத்திரத்தின் முழு விபரங்களையும் முன்வைக்கும் செயற்பாடாகும். அனைத்துக் குழுக்களும் முன்வைத்த பிறகு அவற்றை ஒரு சுவரிலோ அல்லது வெண்பலகையிலோ ஒட்டவும்

1. பாத்திரங்களுக்கிடையிலான சிறந்ததும் அத்தியவசியமானதுமான உறவைக் கற்பனை செய்ய முயலவும்.
2. சிறந்த இணைப்பானது சிறந்த கதையைக் கொண்டு தரும். ஆனால் இந்த நிலையில் கதைக்குள் நுழைய வேண்டாம்.
3. இப்போது அனைத்துப் பாத்திரங்களும் தனித்துவமானவை என்பது உணரப்பட்டிருக்கும்.
4. ஒவ்வொரு பாத்திரமும் தனித்துவமாக தங்கள் தெளிவான இலக்குகளை முன்வைக்கின்றன.
5. நீங்கள் கதையில் யார் கதாபாத்திரம், யார் வில்லன் என்பதைக் கண்டுகொள்ள இயலுமாக இருப்பீர்கள்.
6. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் கதாநாயகனைப் பற்றி மாத்திரமே கதையை உருவாக்கப் போகிறீர்கள். இருப்பினும் ஏனைய பாத்திரங்களும் அவனது அல்லது அவளது கதையில் முக்கிய பங்குவகிக்க முடியும்.

## 05. கதை வசனங்கள்


மக்கள் அரங்கில் கதையானது பிரதான பாத்திரத்தின் செயற்பாடுகள் நிறைந்த சூழல் தொகுப்பேயாகும். அவரின்/அவளின் இலக்குகளை அடைவதும், எதிர்காலத் தடைகளுக்கு முகங்கொடுத்தலும், எதிரியால் ஏற்படுத்தப்படும் சவால்களுமே இதில் காணப்படும். ஒரு கட்டத்தில் சில செயற்பாடுகள் பிரதான பாத்திரத்தை பலமான ஒடுக்குமுறைக்குள்ளாக்கி எதிரியை மிக மேலே தள்ளி விடும். மிகவும் அறிவார்ந்த கதையினைத் தயாரித்தல்.

01. கதையோட்டத்தை வாசித்தல்
02. சாத்தியமான ஒழுங்கில் கதையின் கதையோட்டத்தை மாற்ற முயற்சித்தல்
03. காட்சிகளாக உடைத்தல்
04. அதிக பட்ச காட்சிகள் மூன்று அல்லது நான்காகும்
05. ஒவ்வொரு காட்சி முடிவிலும் ஒரு பெரியளவிலான ஒடுக்குமுறை இருக்க வேண்டும்.
06. ஒவ்வொரு காட்சியின் நிறைவில் மிகவும் தீவிரமான ஒடுக்குமுறை இருக்க வேண்டும்.
07. இந்த கதையோட்டத்தை வாசித்து உங்கள் கதையின் பலத்தினை அதிகரித்துக் கொள்ளவலாம்.
08. உங்கள் கதையில் மாற்றங்களுக்கு இடமிருப்பின் தேவையான அனைத்தையும் மாற்றுவதன் மூலம் உங்கள் கதையினை உறுதியானதாக ஆக்க முடியும்.
09. இதுதான் நீங்கள் அளிக்கை செய்யப்போகும் கதையாகும்.



### கதாநாயகன்

பிரதான பாத்திரம் அல்லது ஒடுக்கப் பட்டவர் அல்லது "யாருடைய கதை இது" எனக் கேட்கும் போது மனதில் வரும் நபர், முழுக் கதைகள் ஒரு கதாநாயகனையே கொண்டிருந்தாலும் நாவல்கள் பலரைக் கொள்ள முடியும்.



### மேலதிக நபர்

பார்வையாளர் என்பவரே இந்த ஒடுக்கு முறைக்கு சாட்சியாகவும் அதிலிருந்து காப்பாற்றும் எத்தனத்தை எடுத்து அது நடவாமல் தடுப்பவராகும்.



Picture 14: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Kilinochchi District / Photo by: Alexanthar Kamilas

# 10

# நடிப்பினூடாக பாத்திரங்களை கட்டியெழுப்புதல்

மக்கள் அரங்கு கருத்தியலில் உணர்வுவயப்பட்ட பலமான பாத்திரங்களை விருத்தி செய்தல் என்பது மாத்திரம் போதுமானதாக அமையாது. நடிகர்கள் அல்லது அளிக்கையாளர்களுக்கு பாத்திரங்களைப் புரிந்து கொள்ளவும், அவர்களை உள்ளகப்படுத்தவும், நடிப்பில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் பெரும் பொறுப்பு இருக்கின்றது.

## பங்குபற்றுபவர்களிடம் இந்தக் கேள்விகளைக் கேளுங்கள்

அன்றாட வாழ்வில் நாம் எத்தனை பாத்திரங்களில் நடிக்கிறோம்?

ஒவ்வொரு வித்தியாசமான பாத்திரத்திலும் நாம் எவ்வாறு நம்மைக் காண்பிக்கிறோம்?

நாம் சில நேரங்களில் ஏனையோரின் பாத்திரத்தை நடிக்கிறோம் இல்லையா?

எந்தப் பாத்திரத்தை நடிக்கும் போது நாம் உண்மையாக மாறுகிறோம்?

சில நேரங்களில் நாம் மக்களையும் அரங்கையும் எல்லா இடங்களிலும் காண்பதில்லையா?

உண்மை வாழ்வில் இயல்பாக நடிப்பது ஏன் மக்களுக்கு இலகுவாக இருக்கிறது?

நிஜ வாழ்விலும் கூட நாம் பாத்திரங்களாக மாறுகின்றோம், ஆதலினால்தான் மக்கள் அரங்க நடிகர்களுக்கு பின்வரும் கேள்விகளைத் தங்களது நடிப்பினூடாகப் புரிந்து கொள்வதற்கு அது முக்கியமாக அமைகிறது என்ற முடிவுக்கு வாருங்கள்.

# நடிகர்களுக்கான பிரதான கேள்வி

### 1. நான் யார்?

நீங்கள் யார் என்பதற்கு ஒரு நடிகராக அல்லது பாத்திரமாக பிரத்தியேகமான ஒரு பதிலைக் கொண்டிருக்க வேண்டும். அது உங்கள் உடலியல் தன்மை என்ன, உணர்ச்சிகள் என்ன, உங்கள் நினைவுகள், சமூக வாழ்வு, குடும்பம், காயங்கள், முரண்கள்,இலட்சியம்போன்றவைஅடங்கியதாக இருக்க வேண்டும். வழிநடத்துனர்கள் நடிகர்களிடம் இந்தக் கேள்விக்கான பதில் அவரிடம் இருக்கிறதா என எப்போதும் கேட்க முடியும்.

### 3. இது எப்போது?

உங்களின் நேரம் குறித்தும் அமைப்புக் குறித்தும் நீங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக இது என்ன காலநிலை, எந்த வருடம், நாளின் என்ன நேரம் போன்றவற்றைக் குறித்து அவதானமாக இருக்க வேண்டும். நாம் நம்மை வெவ்வேறு அமைப்பில் வெவ்வேறு வகையான நேரங்களுக்குள்ளும் அமைப்புகளுக்குள்ளும் நம்மைக் கொண்டு போக வேண்டி இருக்கிறது. வழிநடத்துனர்கள் நடிகர்களிடம் இந்தக் கேள்விக்கான பதில் அவரி/ளிடம் இருக்கிறதா என எப்போதும் கேட்க முடியும்.

### 2. நான் எங்கே இருக்கிறேன்?

நீங்கள் எங்கிருந்து வருகின்றவர் என்பதை நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். எம்மைச் சுற்றியிருக்கிற விடயங்களுக்கு ஏற்ப நாம் வித்தியாசமாக நடந்து கொள்வோம். சுற்றுச் சூழலுடனும் அதிலுள்ள மக்களுடனுமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் நீங்கள் உங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முறையின் மீது இது பாதிப்பைச் செலுத்தக் கூடியது. வழிநடத்துனர்கள் நடிகர்களிடம் இந்தக் கேள்விக்கான பதில் அவரி/ளிடம் இருக்கிறதா என எப்போதும் கேட்க முடியும்.

### 4. நான் இப்போது எங்கிருந்து வந்திருக்கிறேன்?

நீங்கள் எங்கோ பின் பக்கமாக இருந்தோ அல்லது திரைக்குப் பின்னால் இருந்தோ திடீரென்று மேடைக்குள் குதித்தவரில்லை. மாறாக தற்போது சற்று முன்னர் காட்சியில் என்ன நிகழ்ந்தது? நீங்கள் ஒரு வாக்குவாதத்தில் ஈடுபட்டீர்களா? நீங்கள் எதையாவது முன்வைத்தீர்களா? என்பன பற்றிய முழு அறிவுடனேயே நீங்கள் உள்ளே நுழைகிறீர்கள், நிஜ வாழ்வைப் பற்றி யோசித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் வீட்டினுள் தினமும் இரவில் ஒரே வழியாகத்தான் உள்ளே நுழைவீர்களா? இல்லை. நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் என்பது உங்களது மனநிலையை கட்டமைக்கிறது.


## வினைத்திறனான நடிப்பு

மக்கள் அரங்கு செயற்பாட்டின் போது பார்வையாளர்களை ஈர்த்திழுக்கும் மிகவும் முக்கியமான கூறாக நடிப்பு காணப்படுகின்றது. சிலர் மக்கள் அரங்கிற்கு தொழில்வாண்மையான நடிப்பு தேவையில்லை என வாதிடுகின்றனர். நடிப்பின் போது எமது குரல்,உடல்,உள்ளத்தின் புத்தாக்கம் மற்றும் உணர்வுகள் என்பவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும்.இங்கே சாதாரண நபர் பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்வதனைக் காட்டிலும் அதிக திறமையாக தொடர்பு கொள்ள வேண்டும் என்பதனை எதிர்பார்க்கப்படுகின்றது

## பரிந்துரை



உணர்வுகள் மட்டுமல்லாமல் உணர்வுகளானது காரணத்தோடு வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே அவற்றை நீங்கள் நடிக்கின்ற எந்த நேரமும் வெளிப்படுத்த தேவையில்லை. இது உங்களது உணர்வு ரீதியான பயணத்தின் ஒரு பகுதியாகும்.



உணர்ச்சிகள் மட்டுமல்ல நபர்கள் தங்களது குறிக்கோளிற்கு ஏற்ப அல்லது அவர்களது வாழ்க்கையின் நிலைமைகளிற்கு ஏற்ப உணர்ச்சிகளை காட்டுவார்கள். எனவே குறிக்கோளை வெளிப்படுத்துவதானது தேவையான உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும். எனவே வெறுமனே உணர்ச்சிகளை மட்டும் வெளிப்படுத்துவதானது மக்கள் அரங்கைப் பொறுத்தவரையில் முடியாத ஒன்றாகும்.




அளவுக்கதிகமாக நடிக்க வேண்டாம் அதிகமான மக்கள் தங்களது நிஜ வாழ்க்கையில் அளவுக்கதிகமாக நடிப்பதில்லை. மற்றும் அதிகமான மக்கள் சூழ்நிலைகளிற்கு ஏற்ப இயற்கையான பிரதிபலிபபைக் காட்டுகின்றனர். இது குறித்த சூழ்நிலைக்கு அவர்களை தாக்கக்கூடிய அவர்களது தனிப்பட்ட குணாதிசயமாகக் காணப்படுகின்றது. எனவே மேடையில் நிஜமாக இருக்க முயற்சிக்க வேண்டும்.




சுயநலமாக இருக்கக்கூடாது. நீங்கள் தலைமை தாங்கும் நடிகராக இருந்தாலும்,மக்கள் அரங்கானது முழுமையாக உங்களைப் பற்றியதன்று. இது முற்று முழுதாக எந்தவொரு நபர்களைப் பற்றியதன்று. அளிக்கைகளானது அனைவருக்கும் சொந்தமானது. அனைவரும் அவர்களது நடிப்பை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை பெறுவதற்கு தகுதியுடையவர்கள்.

### 5. எனக்கு என்ன வேண்டும்?

இதுதான் மிக முக்கியமான கேள்வி. உங்களுடைய கனவு என்ன என்பது பற்றியும் இந்த அரங்கினூடாக நீங்கள் எதனை அடைய விரும்புகிறீர்கள் என்பதையும் நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். நீங்கள் எதற்காகப் போராடுகிறீர்கள் என்பதை நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய நோக்கம், பின்னணி மற்றும் செயற்பாடுகள் பற்றி அறிந்து வைத்திருக்கிறீர்களா? ஒரு காட்சியை அளிக்கை செய்வதற்காக மாத்திரம் நீங்கள் சாதாரணமாக மேடைக்குள் நுழைய முடியாது. நீங்கள் காட்சிக்குள் இருப்பதற்கு எப்போதும் காரணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

### 6. ஏன் அது எனக்கு இப்போது வேண்டும்?

நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை மிகத் துல்லியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இது நடிப்பிலும் மக்கள் அரங்கிலும் மிகவும் முக்கியமானதாகும். ஏன் உங்களது செயற்பாடானது இப்போது தேவை என்பதை அதாவது இதற்குப் பிறகோ அல்லது இதற்கு முதலோ அன்றி இப்போது ஏன் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### 7. இப்போது நான் எடுத்துக் கொள்ளாவிட்டால் என்ன நடக்கும்?

உங்களுக்கு எது தேவையோ அதை அடைந்து கொள்ளாததன் விளைவானது உங்களுக்கு மிகவும் முக்கியமானது. நாடகத்தின் முக்கிய பங்குகள் உங்களுக்குத் தெளிவில்லாத போது நீங்கள் அதனைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது வெளிவரும், நீங்கள் அந்த வெளியீட்டை நினைத்திருக்கமாட்டீர்கள்.

### 8. நான் எதனைக் கடக்க வேண்டும்?

அரங்கிலுள்ள ஒவ்வொரு நடிகரும் உள்ளார்ந்தும் வெளிவாரியாகவும் பல்வேறு தடைகளைச் சுமக்கின்றனர். அகத் தடைகளானவை நீங்கள் உங்களுக்குள்ளேயே அனுபவித்துக் கொள்வதாகும். புறத் தடைகளானவை இதை நீங்கள் அடைந்து கொள்வதில் முகங்கொடுக்கும் எதிர்ப்பாகும் (பெரும்பாலும் இது மற்றைய பாத்திரங்களால் உருவாக்கப்படும்) நீங்கள் வெளியேறிக் கடக்க முயற்சி செய்யவென அங்கே எப்போதும் ஒரு பிரச்சனை இருக்கும்.

## அவசியமில்லாத உடல் சைகைகளைக் கட்டுப்படுத்துதல்

உடலில் எந்த அசைவுகளும் இல்லாமல் வெறும் சொற்களைக் கொண்டு மாத்திரம் உரையாடுமாறு உங்கள் அளிக்கையாளர்களிடம் கூறுங்கள். இது அவசியமற்ற உடல் சைகைகள் இன்றி அவர்கள் உரையாட வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகும்.

1. மீண்டும் அளிக்கையாளர்களிடம் சொற்கள் எதுவும் இன்றி வெறும் உடல் சைகைகளால் எதையாவது தொடர்பாடுமாறு பணியுங்கள்.
2. தோற்றப்பாடு, உடல் சைகை, உணர்ச்சிகள், அசைவுகள், குரல் பற்றி அவர்களுக்கு இலகுவாக விளக்கம் கொடுங்கள்.
3. ஒரு சொல் பல அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்.
4. எவ்வாறு உங்கள் உடல் உறுப்புகளைக் கொண்டு தொடர்பாடலை மேற்கொள்ள முடியும் என்பதைப் பார்க்கவும். கால்கள், கைகள், தலை, உதடு, மற்றும் ஏனைய உடல் பாகங்கள்.

## ஆதலினால்தான் எவ்வாறு சொற்களுடன் சேர்த்து அவர்களின் உடல்மொழி இயங்குகிறது என்பதை உணர்தல் அளிக்கையாளர்களுக்கு மிகவும் அவசியமானதாகும்.

1. நீங்கள் கட்டாயமாக கதையினை முழுக்க வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டும். அது நீங்கள் அளிக்கை செய்யப் போகும் முழுக்கதையையும் புரிந்து கொள்ள உதவும்.
2. பாத்திரங்களின் அமைப்பைத் தெரிந்து கொள்ளுங்கள். அதனால் நீங்கள் நாடகத்தில் உங்களுடைய இடத்தினை சரியாக அறிந்து கொள்வீர்கள்.
3. ஒவ்வொரு பாத்திரத்துக்கும் இடையிலான உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்ற புரிதலை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
4. வசனங்களைப் புரிந்து கொள்ளுதல். மேலே குறிப்பிட்டது போல செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். அதனால் வசனங்களைப் புரிந்து கொள்ளுதல் என்பது உங்களுக்கு இலகுவானதாக மாறும்.
5. ஒவ்வொருவரது பாத்திரமும் சமூகத்தில் எவ்வளவு தூரம் தனித்துவமானது என்பதை உங்கள் அணிக்குள் உரையாடுங்கள்.
6. தொடராக நடித்துக் கொண்டிருங்கள். ஞாபகம் செய்வதை விட அது முக்கியமானது.
7. மிகவும் சுவாரசியமாகவும் பிரதிபலிப்பானதாகவும் எவ்வாறு உங்களின் பாத்திரத்தை அளிக்கலாம் என்பதைச் சிந்தியுங்கள். அது மேடையில் எப்போதும் நினைத்துப் பேசப்படும் தருணமாக இருக்கும்.
8. பார்வையாளர்களைச் செவிமடுப்பதில் நேரத்தைச் செலவழியுங்கள். ஏனெனில் அவர்களின் மனதில் உள்ள விடயங்கள் கதை வசனத்தில் இருக்காது, அதே போல உங்கள் கதை வசனத்தில் உள்ள விடயங்கள் அவர்களின் எண்ணங்களில் தோன்றாதனவாக இருக்கலாம்.



Picture 15: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Mohammedu Aswer

# 11

# மக்கள் அரங்குக்கான ஆரம்ப புள்ளிகளைத் திட்டமிடல்

இந்தப் பகுதியில் மக்கள் அரங்கினுடைய துவக்க முயற்சிகளையும் அவை இலங்கையிலும் வேறு நாடுகளிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட எவ்வாறு பங்களித்தன என்பதைப் பற்றியும் அவற்றில் சிறந்த நடைமுறைகள் பற்றியும் பார்ப்போம். சில முதன்மையான படிமுறைகள் பின்வருமாறு:

## 01. தேவைகள் மதிப்பீடு

தேவைகள் மதிப்பீடு ஆனது செயற்றிட்ட அணியானது சமூகத்தின் மிக அவசியமான தேவைகள் பற்றிய மிகச் சரியான தகவல்களைத் திரட்டி எடுப்பதாகும்.

தேவைகள் மதிப்பீட்டின் போது சேகரிக்கப்பட்ட தகவல்கள்
அமுலாக்கம் செய்பவர்களுக்கு அடிப்படையில் பிரச்சினைகளையும், வழக்குகளையும், பாதிப்புகளையும் புரிந்து கொள்ளவும், இலக்குகளை உருவாக்கிக் கொள்ளவும், குறிக்கோள்களை பொருளாக்கம் செய்யவும், இருக்கின்ற செயற்றிட்டங்களை அடையாளங் காணவும் இது மிகவும் உதவுகிறது.

இலக்குவைக்கப்படும் சமூகம் குறித்த மிகத் தெளிவான வரைபடத்தை செயற்றிட்ட அணியானது இந்த தேவைகள் மதிப்பீட்டினூடாகப் பெற்றுக் கொள்கிறது. அந்த சமூகத்தின் பின்னணி, வரலாறு, கலாசாரப் பல்வகைமை, சமூக, பொருளாதார நிலைமைகள், மத நம்பிக்கைகள், போன்றவற்றை அறிவதனூடாக அவர்களுடைய அறிவு மட்டம், திறன்கள் போன்ற தகவல்களை நுண்ணியமாக அறிய வாய்ப்பாகிறது.

அடித்தள வரைபு, குழு உரையாடல்கள், ஆவண மீளாய்வுகள், தனிப்பட்ட நேர்காணல்கள், நேரடி அவதானங்கள், SWOT (பலம், பலவீனம், வாய்ப்பு, சவால்) பகுப்பாய்வு போன்றன அவற்றின் உண்மையான தேவைகளை அறிந்து கொள்ளும் கருவிகளாகப் பயன்படுத்தப் படுகின்றன.



Picture 16: Sri Lanka Forum Theatre Programme - Phase II / Training Workshop / Photo by: Mohammedu Aswer

## 02. தகவல் சேகரித்தல்

களத்தில் தகவல் சேகரிக்கும் போது பின்வரும் முக்கிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உங்கள் அணுகுமுறையை தெளிவாகவும் மதிப்பு மிக்கதாகவும் அமைத்துக் கொள்ளுங்கள். ஆய்வினுடைய நோக்கத்தை விளங்கப் படுத்துங்கள். உங்கள் சமூகத்திடம் நம்பிக்கையை வளர்த்து அவர்களின் மதிப்பைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் செயற்றிட்டமானது சுவாரசியமான அதே நேரம் முக்கிமானது என்பதைக் காட்டுங்கள்.

கிரகித்தலில் அதிக கவனம் எடுங்கள். உங்களுடைய சொந்த விவரணங்களை நிறுத்தி பேச்சாளருக்கு அதிக கவனம் செலுத்துங்கள். அது நீங்கள் கிரகித்ததை அவர்களுக்கு மீள உரைப்பதற்கு உதவும். வெறும் சொற்களையும் வசனங்களையும் மாத்திரம் திரும்பக் கூறாமல் அவற்றுக்குப் பின்னால் அவர்கள் வெளிக்காட்ட முனைந்த உணர்வுகளையும் சேர்த்தே எடுத்துரையுங்கள்.

உங்களுடைய தோற்றம் அவர்கள் மீது அனுதாபத்தைக் காட்டுவதாகவும் தெளிவானதாகவும் இருக்க வேண்டும். எப்போதுமே அது பற்றிய உங்களது இறுதி முடிவைக் கூறுவதை நிறுத்துங்கள். உங்கள் பணி என்பது தகவல்களைத் திரட்டுவது தானே அன்றி அவற்றை மதிப்பீடு செய்வது அல்ல என்பதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

அவர்கள் உங்களுக்கு வழங்கும் தகவல்களின் தரத்தினை மதிப்பீடு செய்வது மிகவும் முக்கியமானதாகும். எதுவும் கூறுகிறார்களா? இந்தச் சார்பு நிலைகள் சமூகத்தின் பிரச்சினைக்கு ஏதேனும் வெளிச்சம் தருவதாக இருக்கிறதா என்பன போன்றவற்றை ஆராய்வது மிகவும் முக்கியமானதாகும்.

நேரடியான ஆம் இல்லை பதில்களைத் தராத இலகுவான கேள்விகளைக் கேளுங்கள். யார், எவ்வாறு, எங்கே, எப்போது, ஏன் போன்றவற்றைக் கேளுங்கள். உங்களுக்கு ஏன் எல்லாம் அவசியமானவை என்று தெரியும் என்று ஊகிக்காமல் திறந்த மனதுடன் குறித்த கேள்விகளைக் கேட்பது முக்கியமாகும்.

குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சேகரிக்கும் பிரதான தகவல்கள் அனைத்தையும் குறிப்புக்களாக எடுத்துக் கொள்ளுங்கள். அத்தோடு உங்களுடைய குறிப்புப் புத்தகம் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதையும் மனதில் கொள்ளுங்கள். ஆதலினால் குறிப்புகளை எடுக்க அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள். அத்தோடு இது வெறும் தகவல் பெறும் நோக்கத்துக்காக மாத்திரமே என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

உள்ளூர் சனத்தொகையின் சிறு பிரிவுகளை நெருங்குங்கள். அதிலுள்ள பன்மைத்துவப் பண்புகளை வயது, பால், தொழில், கல்வி மட்டம், சமூக அந்தஸ்து, நம்பிக்கை முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு பெற்றெடுக்க வேண்டும்.

## 02. தகவல்களைத் தொகுத்தல்

தகவல்களைத் தொகுத்தல் என்பது வெவ்வேறு மூல வழிமுறைகளினூடாக நீங்கள் பெற்றெடுத்த தகவல்களைக் கொண்டு ஒரு அர்த்தமுள்ள ஆவணமாக மாற்றி எடுக்கும் செயன்முறையாகும். இந்தப் படிமுறையின் போது அணியானது இந்தச் செயன்முறையில் பங்கெடுத்த உறுப்பி னர்களுடன் தகவல்களைப் பரிமாற வேண்டி இருக்கும். MS Excel , SPSS, போன்ற மென் பொருட்கள் நீங்கள் சேரித்த தகவல்களை ஆவணமாக்கும் இந்த நிகழ்ச்சிக்கு பெரிதும் துணை புரியும்.



Picture 17: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Mannar District / Photo by: Alexanthar Kamilas

## 03. குறிக்கோள்களை உருவாக்குதல்




ஒட்டு மொத்த குறிக்கோள்களை உருவாக்குவதானது செயற்றிட்டத்தின் நோக்கத்தினை அறிந்து கொள்ளவும், திட்டங்களை வரையறுக்கவும், செயன்முறைகள், காலக்கொடுகளை அறிந்து கொள்ளவும் மிகவும் முக்கியமானதாகும். இலக்குகளைப் போலன்றி குறிக்கோள்கள் அதிக விசேட தன்மை கொண்டிருப்பதோடு கணிப்பதற்கு இலகுவானவை ஆகும்.

*இலக்குகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இடையிலான வித்தியாசங்கள்.*

*இலக்குகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இடையிலான மிகவும் பிரதானமான வித்தியாசமானது இலக்கானது தனது சேருமிடம் குறித்து தெளிவாக முன்வைக்கும் அதே நேரம், குறிக்கோளானது அதை அடைந்து கொள்வ-தற்கான செயன்முறையை அளவிடும் முக்கியமான கருவிகளில் ஒன்றாகும்.*

*அத்தோடு இலக்குகள் மிகவும் பரந்து பார்க்கப்படும் அதே நேரம் குறிக்கோள்களானவை மிகவும் குறுகிய குறுங்கால அடைவுகளை நோக்காகக் கொண்டு இயங்குபவை.*

*இலக்கு 01.*
*பால்வேறுபாடு சார்ந்த வன்முறை குறித்த ஒரு விமர்சனப் பாங்குள்ள தோட்டத் தொழிலாளர் சமூக அமைப்பினை உருவாக்குதல்.*

*குறிக்கோள் 1.1*
*25 இளம் கலைஞர்களை மத்திய மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுத்து பால்வேறுபாடு சார் வன்முறையின் பாதிப்புக்களை வெளிக் கொணர எவ்வாறு மக்கள் அரங்கினைப் பயன்படுத்தலாம் எனும் திறன் வளர்க்கச் செய்தல்.*

*குறிக்கோள் 1.2*
*10 மக்கள் அரங்கு அளிக்கைகளைச் செய்ய இளம் கலைஞர்களைப் பயிற்றுவித்தல். அது தோட்டத் தொழிலாளர் சமூகங்களிடையே பால்வேறுபாட்டு வன்முறையின் தாக்கம் மத்திய மாகாணத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குள் எவ்வாறிருக்கிறது என்பது குறித்ததாக அமையும்.*

*குறிக்கோள் 1.3*
*20 மக்கள் அரங்க அளிக்கையாளர்கள் கொண்ட ஒரு குழுவினூடாக 12 மாதங்களுக்கான பால்வேறுபாடு சார் வன்முறை குறித்த உரையாடலைத் தோற்றுவித்தல்.*

*உறுதியான குறிக்கோள்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனித்துவமான பண்புகளைக் கொண்டு அமைந்-திருக்கும்.*

*பிரத்தியேகமானது:*
*மக்கள் அரங்கின் குறிக்கோள்களானவை உறுதியான, விபரமான, குவிமையம் கொண்ட, சிறப்பான விவரணம் கொண்ட விரும்பத்தக்க பலனை வெளியிடக் கூடியனவாக இருத்தல் வேண்டும். நீங்கள் எதனை அடைய வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறுவதாக இருக்க வேண்டும்.*

*அளவீடுசெய்யக் கூடியது:*
*குறிக்கோள்கள் தமது அடைவுகளை நோக்கிய அளவீட்டை கொள்ளளவின் அடிப்படையிலும் எண்ணிக்கை யின் அடிப்படையிலும் அனுமதிப்பனவாக அமைதல் வேண்டும்.*

*அடையக்கூடிய தன்மை:*
*ஒரு குறிப்பிட்ட அளவிலான முயற்சியுடன் அடையப் பெற முடியுமான குறிக்கோள்களாக இவை அமைய வேண்டும்.*

*அவசியத்தன்மை:*
*உள்ளூர் கருத்தியலுக்கு அவசியமான ஒன்றாக குறிக்கோள்கள் இருக்க வேண்டும்.*


*நேரம்:*
*குறிக்கோள் என்பது ஆரம்ப மற்றும் முடிவு நேரத்தை மிகச் சரியாகக் குறிப்பிடுவனவாக இருக்க வேண்டும்.*

## 04. பங்குபற்றுனரைத் தெரிவு செய்தல்

பயிற்றுவிப்பாளர்களை அமர்த்துவதற்கும், பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்வதற்கும் குறிக்கோள்களை முன்வைப்பதற்கும் விண்ணப்பங்கள் கோரப்படும். இறுதி அளிக்கைக்கும் சேர்த்து மிகப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்வது மிகவும் முக்கியமாகும். நிகழ்ச்சிக்கு மிகச் சரியான பங்குபற்றுனர்களைக் கவர்வதற்கு மிகவும் வினைத்திறனான அதே நேரம் செலவு குறைந்த பல வழிமுறைகள் உள்ளன.



சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தல்: முகநூல், டுவிட்டர், இன்ஸ்டாக்ராம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களினூடாக மக்களை சிறப்பாக இணைக்க முடியும். உங்கள் சக அமைப்புக்களையும் தங்களின் தொடர்புகளோடு இவற் றைப் பகிர்ந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளலாம். அத்தோடு சொற் தொடரி களை (#Hashtags) பயன்படுத்துவது தகவல்களை பிரித்தெடுக்கவும் குறித்த பார்வையாளர்களை சென்று அடைய வைக்கவும் சிறந்த முறையாகும்.



உள்ளூர் அமைப்புக்களை இணைத்தல்: மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், சமுர்த்தி அலுவலகங்கள், கலாசார நிலையங்கள், பாடசாலை அதிபர்கள், நாடக ஆசிரியர்கள் போன்றவர்களை அணுகி அவர்களின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சில மாவட்ட மதத் தலைவர்கள் இளைஞர் குழுக்களுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பார்கள். அதுவும் பயன்படுத்தப்படலாம்.




பத்திரிகைகளில் கட்டுரைகளைப் பிரசுரிப்பதன் மூலம் பெருந்திரளான மக்களை அடைய முடியும். உங்களிடம் பண ஒதுக்கீடு இருப்பின் பிரசுர விளம்பரத்துக்கு இறுதியாக செல்ல முடியும்.

### தெரிவுச் செயன்முறை

☐ உங்கள் பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்யும் அளவுகோல்களை நீங்கள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். உங்களின் குறிக்கோள்களுக்கு அமைவாக வயது, இனம், அவசியம், பால் போன்றவிடயங்களை தேவைக்கேற்ப உள்ளீர்த்துக் கொள்ள முடியும்.

☐ விசேட தன்மையுள்ள சமூகங்களை நெருங்குவது அவசியமானதா என்பதை நீங்கள் தான் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக அங்கவீனமானவர்கள், போரினால் விதவைகள் ஆக்கப்பட்டவர்கள், முதியோர் சமூகம் போன்றவை.

☐ கொடுக்கப்பட்டுள்ள நேரத்துக்கு அமைவாக பயிற்சியின் போதும் அளிக்கையின் போதும் அங்கே தயாராக இருக்கின்ற தரப்புக்கள் குறித்த புரிதலை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

☐ பங்குபற்றுபவர்களின் முந்தைய பெறுபேறுகளைக் கொண்டும் அவர்களின் கடந்த கால அளிக்கைச் சான்றுகளைக் கொண்டும் அவர்கள் கொடுக்கப்பட்ட பணியைச் சரிவரச் செய்யும் இயலுமை உள்ளவர்கள் தானா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

☐ தெரிவு செய்யப்பட்ட பங்குபற்றுனர்கள் உண்மையிலேயே குழுச் செயற்பாட்டில் ஆர்முள்ளவர்கள் தானா? வெர்கள் அறிவினை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதனூடாக மற்றவரையும் வளர்க்க ஆர்வம் கொண்டவர்தானா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**உங்கள் அடுத்த படிமுறைகள் என்ன?**

- ☐ தனித்தனியாக மேற்கொள்ளப்படும் நேர்முகத்துக்கு நீங்கள் பங்குபற்றுனர்களை அழைக்க முடியும்.
- ☐ ஒரு ஒத்திகை அல்லது முன்னோட்ட அளிக்கையினைக் கோரி அவரின் திறனின் அளவினைப் பரிசோதித்துக் கொள்ள முடியும்.
- ☐ பங்குபற்றுனர்களை நீங்கள் தெரிவு செய்த பின்னர் அவரின் திறன் வளர்ச்சியை அளவிட்டுக் கொள்ள தனித்தனியான கோப்புக்களை தயாரித்து அவர்களை தொடர்ந்தும் மதிப்பிடல்.
- ☐ அவர்கள் நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவும். அந்த நடைமுறையின் போது பயிற்சிக்கான நேர சூசி, அளிக்கைக்கான இடம், திகதி மற்றும் ஏனைய வசதிகளுக்கான ஏற்பாடுகளையும் உத்தியோகபூர்வ அலுவலர்களின் தொடர்பு விபரங்களையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

## 05. பொருத்தமான பயிற்றுவிப்பாளரைத் தெரிவுசெய்தல்

செயற்றிட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே அதில் ஈடுபடக் கூடிய அருமையான ஒரு பயிற்றுவிப் பாளரை ஆரம்பத்திலிருந்தே கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். பயிற்றுவிப்பாளர் மக்கள் அரங்கில் பிரதானமாக பயிற்சிக்குப் பொறுப்பாக இருப்பார். அது உறுதியான கதை வசனத்தை உருவாக்குவதில் உதவிசெய்தலாகவும் ஒத்திகைகளை மேற்பார்வை செய்வதாகவும் அணிகளை நடிப்பதற்குப் பயிற்றுவிப்பதாகவும் அமையும்.

பயிற்றுவிப்பாளர் நடிகர்களின் பின்புலம் பற்றிய ஆழ்ந்த அறிவைக் கொண்டிருப்பதுடன் தேவை-கள் மதிப்பீட்டில் கண்டடையப்பட்ட முன்மொழிவுகள் குறித்த சிறந்த புரிதலையும் இலக்கு வைத்திருக்கும் சமூகம் குறித்த அறிவையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

### பயிற்றுவிப்பாளரைத் தெரிவு செய்யும் போது எவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்?

- ☐ நிபந்தனைக்கான சான்றுகள் அவசியமாகும். எதிர்பார்க்கப்படும் தரம், நேர அட்டவணை மற்றும் அளிப்புக்கள் குறித்த தெளிவான வழிகாட்டல்கள் இதில் குறிப்பிடப்பட வேண்டும்.
- ☐ மதிப்பீட்டுக்கு முன்னரே தெரிவுக்கான எழுதப்பட்ட நிபந்தனைகள் வழங்கப்பட வேண்டும்.
- ☐ சில வேளைகளில் பயிற்றுவிப்பாளர்கள் மக்கள் அரங்கில் சிறந்த அறிவுடையவர்களாக இருக்கும் அதே நேரம் தெரிவு செய்யப்பட்ட விடயப் பரப்பில் குறைந்த அறிவுடையவர்களாக இருக்கக் கூடும்.
- ☐ பயிற்றுவிப்பாளர் நீங்கள் தெரிவுசெய்த விடயப் பரப்பில் போதுமான அறிவுள்ளவராக இருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பயிற்றுவிப்பாளர் முதலில் பயிற்சி வழங்கிய நிறுவனங்களோடு உரையாடி அவரின் அணுகுமுறைகள் பற்றிக் கற்றுக் கொள்ளுங்கள்.




Picture 18: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Mannar District / Photo by: Alexanthar Kamilas

# 12
# அமுலாக்கலுக்கான தேவைகள்

வெற்றிகரமான மக்கள் அரங்கச் செயற் திட்டத்தைத் திட்டமிடுவதற்கு அரங்க அணி அல்லது அமுலாக்கல் குழு அதன் அமுலாக்கலுக்கான தேவைகள் குறித்து மிகவும் ஆழ்ந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். பயிற்சி, ஒத்திகை, அளிக்கை, மற்றும் தங்குமிடத்துக்கான பொருத்தமுள்ள இடத்தினைத் தெரிவு செய்தல் அதில் அடங்கும். அத்தோடு உணவுக்கான ஏற்பாடுகள், போக்குவரத்து, மற்றும் கொடுப்பனவுகளும் இதன் பகுதியாகவே அடங்கும்.

## 01. பயிற்சிக்கான இடமானது பின்வரும் முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கும்.

**அடிப்படைத் தேவைகள்:**
விசேடமாக உணவு, கழிப்பறை வசதிகள், பயிற்சிக்கான இடம், பயிற்சிக்குத் தேவையான சாதனங்கள் - காகிதப் பலகை, பேனாக்கள், காகிதங்கள், மூல வளக் கையேடுகள், பல்லூடக சாதனங்கள் மற்றும் ஏனையவை.

**நுழைவு:**
தெரிவு செய்யப்பட்ட பயிற்சித் தளமானது திட்டமிடப்பட்ட நேரத்தையும் சிரத்தையையும் விட குறைவாக இருப்பதற்கு அதன் தூரமானது மிகக் குறைந்த நேரத்தில் அடையக் கூடிய இடத்தில் இருக்க வேண்டும். அதன் இடமானது மிகக் குறைந்த நேரத்தில் அடைந்து விட முடியுமானதாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

## 02. அளிக்கை செய்யப்படும் இடம்

மக்கள் அரங்குக்கான அளிக்கைக்கான இடத்தைத் தெரிவு செய்யும் போது அது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- ☐ எந்தத் தடையுமின்றி பொது மக்கள் உள் நுழைவதற்கான வசதிகள் இருக்க வேண்டும்.
- ☐ கொடுக்கப்பட்ட எந்தவொரு நேரத்திலும் போதியளவு மக்கள் தொகையை தடையின்றி உள்ளெடுக்கும் அளவு அளவில் பெரிதாக இருக்க வேண்டும்.
- ☐ உள்நுழைவதற்கான வழிகள் எந்தவிட அசௌகரியத்தையும் ஏற்படுத்தாததாக இருக்க வேண்டும்.
- ☐ சிறந்த ஒலி அமைப்பு அரங்க ஒலியை மிகத் துல்லியமாக பரவலாக்கும் வகையில் அமைக்கப் பட வேண்டும். அவ்வாறில்லாத போது அதற்கான அமைப்புக்கள் வெளியிலிருந்து பெறப்பட்டு அமைக்கப்பட வேண்டும்.

**மக்கள் அரங்கானது ஒரு பொதுவான வெளியில் அல்லது மைதானத்தில்-தான் அரங்கேற்றப்பட வேண்டும் என்பதல்ல இது ஒரு வகுப்பறையில் கூட அளிக்கை செய்யப்பட முடியும். எவ்வாறாயினும் ஒரு பெரிய பார்வையாளர் தொகை எதிர்பார்க்கப்பட்டால் மேலே குறிப்பிடப்பட்டிருப்பவற்றைக் குறித்து சிந்திக்க முடியும்.**



Picture 19: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Alexanthar Kamilas

# 13
# கலை முகாமைத்துவம்

கலை முகாமைத்துவம் என்பது அரங்க அணியினுடைய ஒட்டுமொத்த தொழிற்பாட்டையும் கவனங் கொள்ளும் பகுதியாகும்.

செயற்றிட்டத்தினை முழுமையாக்கும் தினசரி நடவடிக்கைகளை உள்ளடக்கியது. கீழ்வருவன கலை முகாமைத்துவத்தின் பிரதான அம்சங்களாகும்.

## அழகியல்:

செயற்றிட்டத்தின் கலைத்துவ அம்சங்களைத் திட்டமிடலும் முகாமை செய்தலும் இதில் அடங்கும். - இசை வாத்தியக் கருவிகள், ஒப்பனை சாதனங்கள், ஆடைகள், பூச்சு வண்ணங்கள், பின்னணி சாதனங்கள்

## நிதி:

அன்றாட செலவுகள் மற்றும் அடிப்படை வருமான மற்றும் செலவுகளை முகாமை செய்தல் இதில் அடங்கும். அத்தோடு அணிக்குரிய கணக்குகளை முகாமை செய்தலும் அதில் அடங்கும்.

## மக்கள் உறவு:

செயற்றிட்டத்தையும் அரங்க அளிக்கைகளையும் விளம்பரம் செய்தல் மற்றும் ஊக்குவித்தல் என்பன இதில் அடங்கும். சமூக சந்திப்புக்கள், பொது அறிவித்தல்கள், விளம்பரங்கள், பதாதைகள், சுவரொட்டிகள், சமூக வலைத்தளங்கள், பத்திரிகை கட்டுரைகள் போன்றவை இதற்கெனப் பயன்படுத்தப்பட முடியும்

## நிதி திரட்டலும் அறிக்கையிடலும்:

நிதியைக் கொண்டிருத்தலே மொத்த செற்றிட்டத்தினது முழுத் தொழிற்பாட்டையும் தீர்மானிக்கும் பிரதான விடயமாக இருக்கிறது. ஆதலினால் குறித்த வழங்குனர்களையும் அனுசரணையாளர்களையும் நெருங்குவது மிகவும் முக்கியமானதாகும். நம்பகத் தன்மையையும் உறவையும் வைத்துக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். அத்துடன் செயற்றிட்டமானது வெளிப்படைத் தன்மை உடையதாகவும் நிதி வழங்குனர்களுக்கு தொடர்ந்தும் அறிக்கையிடுவதாகவும் அமைய வேண்டும். இறுதித் திகதிகளை அடைய முன்னர் செற்றிட்டத்துக்கான நல்ல அடைவுகளைப் பெற்றுக் கொள்வது அதனை நீடித்து நிலைக்க வைக்கும்.

## குழு அங்கத்துவம்:

மக்கள் அரங்க அளிக்கையாளர்கள் பொது மக்களுக்காக அளிக்கைகளைச் செய்வது இதில் உள்ளடங்கும். இந்தப் பகுதியே அளிக்கையினைத் திட்டமிடும் பகுதியில் கலந்துரையாடப்பட்ட அவசியமான பகுதிகளை மக்கள் அரங்கானது பிரதிபலிப்பதற்கு பொறுப்பாக இருக்கும் பிரிவாகும்.

## பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்த பின் என்ன செய்வது?



மக்கள் அரங்க அளிக்கைக்கான பிரபல்யத்தையும் விளம்பரத்தையும் போதியளவு கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். எப்போதுமே உள்ளூர் அதிகார சபைகளான பிரதேச செயலகம், பொலிஸ், கிராம சேவகர் போன்றோர்களுக்கு அறிவித்து பொது இடங்களின் அளிக்கை செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.



சுவரொட்டிகள், பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், குறுஞ் செய்தி, டுவிட்டர், சமூக வலைத்தள நிலைத் தகவல்கள், பத்திரிகைக் கட்டுரைகள் என மக்களை ஒன்று திரட்டும் கருவிகளை உபயோகிப்பது மிகவும் அவசியமாகும்.



நாடகம் பற்றி மக்களுக்கு அறிவிப்பதற்கு பொதுமக்கள் அறிவிப்பை பயன்படு-த்துவது முக்கியமாகும்.



சில அரங்கக் குழு அங்கத்தவர்கள் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுக் கழகத் தலைவர்கள், நலன் விரும்பிகள், இளைஞர் வலையமைப்புக்களின் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் போன்றவற்றை அணுகி தங்கள் நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் நாடகம் பற்றிய செய்தியை எத்தி வை-ப்பார்கள்.

## அளிக்கையைத் திட்டமிடுவதற்காக குழு அங்கத்தவர்களைத் தயார் செய்தல்

அளிக்கைக் குழுவின் அங்கத்தவர்களான தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தங்களது பாத்திரத்தை மிகச் சரியாகச் செய்வதற்காக மக்கள் அரங்கின் முறைமைகளோடு ஆழ்ந்த பரிச்சயம் கொண்டிருப்பது அவசியமாகிறது. - அரங்கப் பயிற்சிகள், மக்கள் அரங்க அமைப்புப் பற்றிய அறிவு மற்றும் விளை யாட்டுக்கள் பற்றிய பரிச்சயம்.

பங்குபற்றுனர்கள் சமூக விடயங்களையும் அவர்களின் இதயத்துக்கு மிகவும் நெருக்கமான பிரச்சினை-களையும் கற்றுக் கொள்வதன் மூலமாக அவற்றின் மூல வேர் மற்றும் தீர்வுகள் பற்றிய ஆழமான புரிதலுக்கு வருவார்கள்.

அணியானது இருக்கின்ற சமூகப் பிரச்சினைகளுக்கும் செயற்றிட்டத்தின் குறிக்கோள்களுக்கும் இடை யிலான தொடர்பை சரிவரப் புரிந்து கொள்ளும் போதுதான அதன் பொருந்து தன்மை பேணப்பட முடியும்.

**அளிக்கைக்காக அணியைத் தயார் செய்யும் போது செய்யப்பட முடியுமான சில செயற்பாடுகளைப் பார்ப்போம்.**



## செயற்பாடு 1: நகைச்சுவைக் கதிரை

*(இது முதல் தயக்கத்தை உடைக்கவும் குழு மனநிலையை வளர்க்கவும் பயன்படுத்தப்பட முடியும்)*

*நடைமுறை:*
*குழுவானது நடத்துனரைச் சுற்றி வட்டமாக அமர்ந்திருக்கும். நடத்துனர் கூறுவார் " சுனாமி வந்து அனைவரையும் எடுக்கிறது" என்று*
*அத்தோடு ஒரு பிரத்தியேக வசனத்தையும் அதில் சேர்ப்பார். " கம்பஹா மக்களை"*

*இந்தத் தகவலைப் பகிர்பவர்கள் எழுத்து நின்று இன்னொரு கதிரையைத் தேட வேண்டும். அப்போது நடத்துனர் தனக்கும் ஒரு கதிரையைத் தேடுவார்.*



## செயற்பாடு 2: த்றீ டு டேங்கோ

*(அணியைக் கட்டமைக்கவும் திறன் வளர்ச்சிக்கும் பயன்படுத்த முடியும்)*

*நடைமுறை:*
*சிறு குழுக்களாக அனைவரும் பிரிக்கப்பட்டு அவர்கள் பகிரும் மூன்று விடயங்களை தெரிவு செய்யக் கோரப்படும். (பொப் இசை, கோழிச்சாப்பாடு, சீஸ் கொத்து)*

*அவர்கள் இதனை அடுத்த அணியோடு இணைந்து செயற்படுத்த வேண்டும். அதன் மூலம் மற்ற அணி அவர்கள் என்ன பகிர்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.*



## செயற்பாடு 3: விபரித்தல்

*(பங்கு பற்றுபவர்களின் திறன் வளர்ச்சிக்கும் பயன்படுத்த முடியும்)*

*நடைமுறை:*
*பங்குபற்றுபவர்கள் சோடிகளாகப் பிரிக்கப் படுவார்கள். நடத்துனர் உண்மையில் இருக்கின்ற அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒரு இடத்தின் பெயரை கண்களை மூடிக் கொண்டு நினைக்கச் சொல்வார். அந்த இடத்தின் நிறம், வாசம் வடிவம் போன்றவற்றை விரிவாக எண்ணச் சொல்வார்.*

*அதன் பிறகு கண்களைத் திறந்து தனது துணையை அழைத்துக் கொண்டு சுற்றி வந்து அதனைப் பற்றி விபரிப்பார். கேட்டுக் கொண்டிருப்பவர் அவருடைய உணர்ச்சிகளை துல்லியமாக அவதானித்து அந்த இடத்தைக் கண்டுபிடிப்பார்.*



Picture 20: Sri Lanka Forum Theatre Programme - Phase IV / Vavuniya District / Photo by: Mohammedu Aswer

**மக்கள் அரங்க செயற்றிட்டத்தை மதிப்பிடுவதற்கு திட்டவட்டமான ஒற்றை முறை ஒன்று இல்லை. முழு இயல்பையும் இலக்குகளையும் செயற்றிட்ட கால எல்லையையும் பொறுத்து ஒருவர் புதியதொரு மதிப்பீட்டு முறையினை மக்கள் அரங்க செயற்றிட்டத்துக்கு முன்வைக்க முடியும்.**

# 14
# கண்காணித்தலும் மதிப்பிடுதலும்

கண்காணிப்பும் மதிப்பீடும் மக்கள் அரங்க செயற்றிட்ட அமுலாக்கலில் மிக முக்கியமான பகுதிகளாகும். சிலர் இதுவே செயற்றிட்டத்தின் இறுதிப் பகுதி என்று நம்புகின்றனர். செயற்றிட்டத்தின் வெற்றியை இறுதியில் தீர்மானிக்க உதவும் பகுதியாகும். எவ்வாறாயினும் கண்காணிப்பும் மதிப்பீடும் மொத்த செயற்றிட்டத்தின் உள்ளக அம்சமாக விளங்குகின்றது.

## 1. கண்காணித்தல்

கண்காணிப்பு என்பது கட்டமைக்கப்பட்ட சேர்க்கை, பகுப்பாய்வு மற்றும் செயற்றிட்டத்திலிருந்து பெறப்படும் தகவல்களை உபயோகித்தல் என்பனவாகும். அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளவும், பயிற்சிகளை மேம்படுத்தவும் எதிர்கால செயற்பாடுகளை முறையாகப் பேணிக்கொள்ளவும் உள்ளக மற்றும் வெளி பொறுப்புக் கூறும் தன்மையானது பேணப்பட வேண்டியது அவசியமானது. அதனூடாக எதிர்கால தயாரிப்புகளுக்கான பங்குபற்றுனர்களை வலுப்படுத்த முடியும். அவ்வாறே குழு அங்கத்தவர்களையும் மேம்படுத்த முடியும்.

## 2. மதிப்பீடு என்றால் என்ன?

மதிப்பீடு என்பது முறையாகவும் குறிக்கோளுடனும் சாத்தியமான அளவு முழுமையாக்கப்பட்ட மக்கள் அரங்க கணிப்பீட்டு முறைமையாகும். கணிப்பீடானது எதிர்கால மக்கள் அரங்க முறையை முன்னேற்றுவது குறித்த திட்டங்களை அதற்கான தரவுகளைக் கொண்டு தயாரிக்கின்றது. உண்மையில் பின்வரும் விடயங்களை மதிப்பீடானது தூண்ட வேண்டும்.

☐ அவசியத்தன்மை ☐ திறன் ☐ செயல் ஆற்றல் ☐ பாதிப்பு ☐ தகவமைப்பு

## 03. செயற்றிட்டத்தை எவ்வாறு மதிப்பிடுவது?

தர்க்க ரீதியாக ஒரு செயற்றிட்டத்தின் தகவமைப்பை மதிப்பிடும் ஒரே வழியாக இருப்பது அதன் ஒட்டுமொத்த செயல் திறனை முன்னேற்றும் வழிமுறைகளைக் கண்டறிவதாகும். அதனால்தான் பின்வரும் படிமுறைகள் மக்கள் அரங்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையில் பின்பற்றப்பட வேண்டியன.

### அடிமட்ட கணக்கெடுப்பு

அளிக்கைக்கு முன்னர் பார்வையாளர்களின் முழுமையான மனநிலையை அறிந்து கொள்வதே இம் முறைமையாகும், குறிக்கப்பட்ட குழு உரையாடல்கள் மூலமாகவோ அல்லது கவனமாகத் தெரிந்து எடுக்கப்பட்ட வினாப்பத்திரங்கள் மூலமாகவோ இத்தகைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட முடியும்.

### அளிக்கைக்குப் பிந்தைய மதிப்பீடு

இது அளிக்கை நிகழ்த்தப்பட்ட பின்னர் அது ஏற்படுத்திய பாதிப்பு அல்லது செல்வாக்குக் குறித்து பெறப்படுகின்ற பின்னூட்டத்தின் அடிப்படையில் பெறப்படுவதாகும். அடிப்படையில் நேர்காணல் மூலமாகவோ குழு உரையாடல்கள் மூலமாகவோ ஆவணப்படுத்த முடியும். அதே போல தொடர்ந்து 2-3 மாதங்களுக்குப் பிறகும் அளிக்கையினுடைய நீண்ட கால விளைவு குறித்த ஒரு மதிப்பீட்டைச் செய்ய முடியும். மதிப்பீட்டு நோக்கத்துக்கென பின்வருவன பயன்படுத்தப்பட முடியும்.

**மதிப்பீட்டுக்காக பின்வரும் வழிமு றைகள் பின்பற்றப்பட வேண்டும்.**

- குவிமையப்படுத்தப்பட்ட குழு உரையாடல்கள்
- அடிப்படைத் தரவு நேர்காணல்கள்
- வினாக் கொத்துக்கள்
- நேர்காணல்களினூடான உள்ளக கணிப்பீடு
- அவதானம்
- பங்குபற்றல் காணொலிகள்

## List of References


Boal, A. (1979) *Theatre of the Oppressed.* London: Pluto Press.
Boal, A. (1985) *Theatre of the Oppressed.* New York: TCG.
Boal, A. (1994) Translated by Adrian Jackson. *The Rainbow of Desire: The Boal Method of Theatre and Therapy.* UK: Routledge.
Boal, A. (1995) *The Rainbow of Desire.* London: Routledge.
Boal, A. (1998) Translated by Adrian Jackson. *Legislative Theatre: Using Theatre to Make Politics.* UK: Routledge.
Boal, A. (2001) Translated by Adrian Jackson and Candida Blaker. *Hamlet and the Baker's Son: My Life in Theatre and Politics.* UK: Routledge.
Boal, A. (2006a) *The Aesthetics of the Oppressed.* New York: Routledge.
Boal, A. (2006b) Translated by Adrian Jackson. *The Aesthetics of the Oppressed.* UK: Routledge.
Boal, A. (2008) *The Theatre of the Oppressed.* London: Pluto Press.
Fanon, F. (1967) Black Skin White Masks. New York: Grove Press.
Freire, P. (1972) Pedagogy of the Oppressed. Penguin.
http://tdd.org.ua/en/declaration-principles-theatre-oppressed (Accessed: February 2018)
http://www.uq.edu.au/ccsc/augusto-boal-1931-2009
Kershaw, B. (1992) *The Politics of Performance.* London and New York: Routledge.
Liyanage, S. (2016) Meditations on Acting: Theory Practice and Performance, d E v publishing. Mount Lavinia.
Midha, G. (2010) Theatre of the Oppressed a Manual for Educators, University of Massachusetts, Amherst.
Osburn, K. M. (2010) "Forum Theatre Empowering Students to Speak, Act, and Know"
Paterson, D. (2018) Pedagogy and theatre of Oppressed www.ptoweb.org (Accessed)
Robinson A. (2016) www.ceasefiremagazine.co.uk/augus to-boal-brecht-boal-method/(Accessed)
Taite, J. Introducing Forum Theatre as tool to explore issues of equality and discrimination, National Association for Youth Drama (NAYD).

மக்கள் அரங்கு: கற்றல் கையேடு பிரேசீலிய அரங்க இயக்குனரான அகஸ்டோ போல் அவர்களினால் ஊக்கமளிக்கப்பட்ட மூலப் புத்தகமாகும். போல் அவர்கள் மக்கள் அரங்கு என்ற கருத்தியலை உருவாக்கிய அரங்கவாளர் மட்டுமன்றி தத்துவ அறிஞரும் ஆவார். இவரின் அரங்க மன்ற கருத்தியலில் அரங்கக் காட்சி ஒன்றின் தொடர் செயற்பாட்டில் பார்வையாளரை பார்வை செயற்பாட்டாளர் உருமாற்றம் செய்தவர் ஆவார். முன்னதாக போல் அவர்களின் அரங்க செயற்பாட்டில் முக்கிய அரங்கவாளர்களான கொன்ஸ்டான்டின் ஸ்தானிஸ்லேவஸ்கி மற்றும் மிகவும் முக்கியமாக ஜெர்மனியின் அரங்க இயக்குனர் பேர்டோய்ட் ப்ரெச் ஆகியோரின் பாதிப்புகள் காணப்படுகின்றன. போல் அவர்களின் கொள்கை ரீதியான அரங்க அணுகுமுறைகளில் பிரேசில் கல்வியியலாளர் பவுலோ பிரேரி அவர்களின் புரட்சிகரமான கல்விக் கொள்கைகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

இந்த மாணவர் கையேடு இலங்கை மக்கள் அரங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் அரங்க நிகழ்வுகளின் ஊடாக உருவாக்கப்பட்டது. இந்த மக்கள் அரங்க நிகழ்ச்சித்திட்டம் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தினால் (SDJF) தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு, மாகாண கல்வி அமைச்சுகள் மற்றும் கல்வித்திணைக்களங்கள் (வடக்கு, மத்திய, தெற்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் மேல் மாகாணங்கள்), யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகம் ஆகிய இரு பல்கலைக்கழகங்கள் என்பவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது. இந்த தொடர் நிகழ்ச்சித்திட்டம் கொழும்பில் உள்ள இலங்கை ஐக்கிய அமெரிக்க தூதுவராலயத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

யுத்தத்துக்கு பின்னரான இலங்கையின் இளைய சமுதாயத்தின் இடையே சமூக ஒற்றுமை, அகிம்சை மற்றும் பன்மைத்துவ விழுமியங்கள் என்பவற்றை மேம்படுத்தி அவர்களை தாங்குதிறன் மிக்க சமாதானம் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டாளர்களாக வலுவூட்ட எவ்வாறு அரங்க மன்ற செயற்பாடுகள் ஒரு கருவியாக பயன்படுத்தப்படலாம் என்பதை எடுத்துக்காட்டும் இந்த கற்றல் கையேடு உருவாக்கம் காலத்துக்கு ஏற்ற ஒரு முயற்சியாகும்.

மக்கள் அரங்கு: கற்றல் கையேடு ஆசிரியர்கள், சமுதாய தீவிர செயற்பாட்டாளர்கள், கல்வியியலாளர்கள் அத்துடன் தமது சமூகம் மற்றும் அதற்கு மேலாக நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த விரும்பும் மாணவர்கள் ஆகியோருக்கு இந்த கையேடு ஒரு பெறுமதி மிக்க மூலப் புத்தகமாக திகழும்.

**கலாநிதி சௌம்யா லியனகே**
பீடாதிபதி, பட்டப்பின் கற்கைகள் பீடம்
கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகம்

Ministry of National Co-existence Dialogue and Official Languages
Minister of Education, Cultural Affairs, Sports and Youth Affairs, Northern Province and Provincial Department of Education, Northern Province
University of Jaffna
University of Visual and Performing Arts
U. S. Embassy in Sri Lanka
Canada
High Commission of Canada to Sri Lanka
The Neelan Tiruchelvam Trust
SDJF
Sri Lanka Development Journalist Forum
9 789557 765099